பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 29 வெள்ளிக்கிழமை 11.02.2022 கதிர் 98

### இது ரகசியம் அல்ல!

என் பத்திகளில் நான் ஒரு விடயத்தை அடிக்கடி சொல்லுவதுண்டு. 'கணக்குப் பிள்ளை அதிகம் பேசச் கூடாது. கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' – என்பேன்.

ஆனால், பல இடங்களிலும் கணக்குப் பிள்ளைகள் தான் அதிகம் பேசுகின்றார்கள்.

2

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் திருத்தும் சட்டமூலம் நாடாளுமன்றில் நேற்று முன்வைப்பு



கொழும்பு, பெப். 11

1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸினால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோதே இந்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டது.

இதன்போது, ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கைக் கூட்டு ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான உறுதிமொழிகள் சட்டமூலத்தில் பரிசீலிக்கப்படுமா என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் பீரிஸிடம் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற வாதத்தை சுமந்திரன் எம்.பி. முன்வைத்தார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குக; மாற்றுக!

## சபையில் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



இலங்கையில் 300 – 400 பேர் தற்போதும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. ஒருசிலரது வழக்குகளே எப்போதும் பிரபல்யமாகப் பேசப்பட்டுள்ளன. எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க அல்லது முழுமையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

12



## ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்திய திருத்தங்கள் இடம்பெற்றுள்ளனவா?

### பீரிஸ் மழுப்புகின்றார் என்று ஹக்கீம் குற்றச்சாட்டு

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தச் சட்டமூலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ள திருத்தங்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில்

12

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இலங்கைக்கு ஒரு சாபக்கேடு

### இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை; நாடாளுமன்றில் ரிஷாத் எம்.பி. ஆவேசம்



பாதுகாப்பு அமைச்சர் நினைத்தால் கையொப்பத்தை இட்டு சந்தேகம் என்று சிறையில் வைக்க முடியும் என்ற இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு. இந்தச் சட்டத் திருத்தத்தில் எந்த விதமான மாற்றங்களையும்

12

## வவுனியா பல்கலையின் கல்வெட்டில் திடீர் மாற்றம்

### இடம் மாறியது தமிழ் மொழி

(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் திரை நீக்கப் பகுதியில் இருந்த தமிழ் மொழி கல்வெட்டில் திடீர் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்துக்கு

2

## திஸ்ஸ விதாரண எம்.பி. வசமானது கோபா குழுவின் தலைமைப் பதவி



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர்

12

## கோப் குழுவின் தலைவராக மீளவும் சரித ஹேரத் தெரிவு



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுக் கூடிய அரச பொறுப்பு முயற்சிகள்

15

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கணக்குப் புத்தகம் மறைந்து விடுகின்றது.

இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் விடயத்திலும் கணக்குப் பிள்ளைகள்தாம் அதிகம் பேசுகின்றனர். கணக்குப் புத்தகங்கள் – அல்லது புத்தகக் கணக்குகள் – அதிகம் இடிக்கின்றன.

2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழக மீனவர்களின் 661 படகுகளை இலங்கை தடுத்துக் கைப்பற்றியிருக்கின்றது. அவற்றில் 582 படகுகளை அப்போதைய சட்டங்களுக்கு அமைய இலங்கை நீதிமன்றங்கள் விடுவித்துள்ளன.

அந்த 582 படகுகளில் 445 படகுகளை இந்திய மீனவர் தரப்பே இலங்கைக்கு நேரில் வந்து மீட்டுத் தங்கள் தயாகத்துக்குக் கொண்டு போய் விட்டன.

எஞ்சிய 137 படகுகளில் பன்னிரண்டு படகுகள் மிகத் தரமானவை. எந்தக் கணத்திலும் இந்திய மீனவர் தரப்பு வந்து 'ஸ்டார்ட்' பண்ணிக் கொண்டு போகக் கூடிய தரத்தில் இருந்தன.

இதற்குப் பின்னர் இதுவரை மேலும் 79 படகுகள் இலங்கைத் தரப்பால் இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன. அதன்படி பார்த்தால் இப்போதைய நிலையில் 137 + 79 = 216 இந்திய மீனவர்களின் படகுகள் இலங்கையிடம் இருக்க வேண்டும்.

இன்று வரை கடந்த ஐந்து நாள்களாக – இலங்கை அரசுத் தரப்பு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்த படகுகளின் எண்ணிக்கை 148.

இதைவிட மயிலிட்டியில் பதினைந்தும், காங்கேசன்துறையில் மூன்றும், மன்னாரில் மூன்றும் என 21 படகுகள் மிச்சம் இருக்கின்றன.

மொத்தம் இருக்க வேண்டிய 216 படகுகளில் 148 படகுகள் ஏலத்தில் போக எஞ்ச வேண்டியது 68 படகுகள்.

அந்த 68 இல் மயிலிட்டியிலும், காங்கேசன்துறையிலும், மன்னாரிலும் உள்ள 21 போனால் மிச்சம் 47 படகுகளும் எங்கே என்பதுதான் கேள்வி.

கணக்குப் புத்தகம் பேசினால் இந்தக் கேள்வியைத்தான் கேட்கும். ஆனால் கணக்குப் பிள்ளைகள்தான் இங்கு அதிகம் பேசுகின்றார்கள். அதனால் இந்திய மீனவர்களின் 47 படகுகளை விழுங்கி ஏப்பம் விட்ட அலிபாபாக்கள் யார் என்பது மறைக்கப்படுகின்றது.

தமிழக மீனவரின் நல்ல நிலையில் இருந்த ஆறு படகுகளை 2021 நவம்பர் முதலாம் திகதி ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஒரு நகர்த்தல் பத்திரம் மூலம் விண்ணப்பித்து, இலங்கைக் கடற்படை தன் வசம் எடுத்துச் சென்ற தகவலை 'காலைக்கதிர்' பிரத்தியேக – பரபரப்பு – செய்தியாக வெளியிட்டு உண்மையை அம்பலப்படுத்தியிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்படி அவ்வப்போது படகுகள் சுருட்டப்பட்டமை பற்றிய கணக்குகள் எல்லாவற்றையும், ஒட்டு மொத்தமாக இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் படகுகளும் ஏலம் விடப்பட்டு, விற்றுத் தீர்க்கப்பட்டன என்று கணக்குக் காட்டி, கணக்கை 'குளோஸ்' பண்ணும் (மூடும்) திட்டம்தான் இப்போது அரங்கேறுகின்றது போல எனக்குப் படுகின்றது.

இந்திய மீனவர்கள் இங்கு வந்து, அவற்றை நேரடியாகப் பார்வையிட அனுமதித்தால் விடயம் விவரமாக அம்பலமாகி விடும் என்பதால் இந்த அவசரம் போலும்.

இப்போது ஏலம் விட்டாயிற்று. கணிசமான படகுகள் விற்றுமாயிற்று. இனி என்ன, எந்தப் படகு பற்றிக் கேள்வி எழுப்பினாலும், கவுண்டமணி – செந்தில் வாழைப்பழக் கணக்கு மாதிரி 'அதுதான் இது' – என்று பதில் சொல்லி சமாளித்து விடலாம் அல்லவா? எல்லாப் படகுகளுக்கும் ஒன்று சேர கணக்குக் கேட்காத வரை – ஒரே சமயத்தில் உரிமை கேட்டு ஒன்றாக வராத வரை – இப்படி 'அதுதான் இது!' என்ற வாழைப்பழக் கணக்கு நன்கு உதவும்.

அதிகார மாற்றங்கள் – ஆட்சித் தரப்புக் கைமாறல்கள் – வரும் போது, மறைக்கப்பட்ட – அல்லது சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்ட – படகுகள், கணக்குகள் குறித்து ஆராய்வதற்கு ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படும் நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★ ★ ★

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரா முக்கியமான கருத்து ஒன்றை முன்வைத்திருக்கின்றார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் படைத் தரப்பில் முக்கிய பதவிகளை வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தற்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சவீந்திர சில்வா உட்பட 39 மூத்த படை அதிகாரிகளுக்கு மேற்குலக நாடுகள் விசா வழங்க மறுப்புத் தெரிவித்திருக்கின்றன என்பதுதான் அந்தத் தகவல்.

இந்த அதிகாரிகளின் நலன் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இதையொட்டி ஒரு தகவல் சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

பிரிட்டனில் இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் நடைபெற்ற ஓர் ஆர்ப்பாட்டத்தின் போது, தூதரகத்தில் பணியாற்றிய இலங்கைப் படை அதிகாரி ஒருவர் சீருடை அணிந்தவாறு கூட்டத்தில் பங்கு பற்றியோரை நோக்கி, கழுத்தை வெட்டிக் காண்பிப்பது போல விரலினால் சைகை செய்த விடயம் பிரிட்டன் நீதிமன்றத்தில் பெரிய சர்ச்சையாக எழுந்தமை தெரிந்ததே.

இந்த அதிகாரிக்கு எதிரான வழக்கில் முன்னைய நல்லாட்சி அரசு உரிய சட்ட உதவிகளை வழங்கவில்லை என்று குற்றம் சாட்டி, அதைக் கடந்த தேர்தலில் பெரிய பிரசார விவகாரமாக மாற்றி, அரசியல் ஆதாயம் தேடினர் ராஜபக்ஷக்கள்.

ஆனால், ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சியை கைப்பற்றிய பின்னர், முன்னர் தமக்கு சலாம் வைத்த ஒரு சில படை அதிகாரிகளை மட்டும் உயர் பதவி வழங்கித் தம்முடன் அரவணைத்துக் கொண்டனரே தவிர, யுத்தத்தில் சிங்கள தேசத்துக்காகத் தியாகம் புரிந்த படை அதிகாரிகள் பலரை மறந்து விட்டனர். அவர்களின் நலனைக் கவனிக்கவே இல்லை என்று எதிர்க்கட்சிகள் பலவும் முணுமுணுக்கின்றன.

ஆனால், இதனை விவகாரமாக்கி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அதிரடிப் பேச்சாளர்கள் ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பீடம் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குவதற்கு சஜித் உட்பட்ட கட்சித் தலைவர்கள் அனுமதிக்கின்றார்கள் இல்லை என்று கட்சிக்குள் முணுமுணுக்கப்படுகின்றது.

யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்த படை அதிகாரிகளை ராஜபக்ஷக்கள் கைவிட்டு விட்டனர் என்ற பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு இரண்டு காரணங்களுக்காக எதிரணித் தலைமை தடை போடுகின்றது.

ஒன்று – அப்படி பிரசாரம் செய்தால், இப்போது ஆட்சிப்பீடத்தை ராஜபக்ஷக்கள் இராணுவ ஆட்சியாக மாற்றி வருகின்றார்கள் என்று ஏற்கனவே ஆரம்பித்த பிரசாரம் அடிபட்டுப் போய்விடும். அல்லது புதிய பிரசாரம் முன்னையதற்கு மாறானதாகி விடும்.

அடுத்தது – யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் போரிட்ட தளபதிகளின் நலன் குறித்துக் குரல் எழுப்பினால் அது வீணாகத் தமிழர் தரப்பை சீண்டி, உசுப்பேத்தி, எதிரணிக்கு எதிராகத் திருப்பி விடும் வேலையாகி விடும் என்று எதிரணித் தலைமை கருதுகின்றது.

அதனால் இந்த விடயத்தை அமுக்கியே வாசிக்கின்றது பிரதான எதிர்க்கட்சி.

ஆனால், அரசுக் கூட்டமைப்புக்குள் அரசுக்கே கொமுக்கி போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கும் சு.கவுக்குத்தான் இதில் கட்டுப்பாடு, மட்டுப்படுத்தல்கள் எதுவுமே இல்லையே...! அதனால் அக்கட்சியின் செயலாளர் இந்தப் படை அதிகாரிகளின் நலன் கவனிக்கப்படவில்லை என்று தெரிவித்து, ஆளும் கட்சித் தலைமைக்கு 'ஸேம் சைட்' கோல் அடிக்கின்றார். அவ்வளவுதான்.

– மின்னல் –

## வவுனியா பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று விஜயம் செய்யும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அதனை அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார். இந்நிலையில், பல்கலைக்கழகத்துக்கு நுழைவாயில் ஊடாக உட்சென்று பல்வேறு பீடங்களுக்கும் பிரிந்து செல்லும் பிரதான பகுதியில் முக்கோண வடிவில் பல்கலைக்கழகத்தின் பெயருடன் கூடிய கல்வெட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.




வீதியில் இருந்து உட்செல்லும்போது காட்சிக்குப் புலப்படும் வகையில் தமிழ் மொழியும், மற்றைய இரு பக்கங்களில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் குறித்த கல்வெட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு வீதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்குள் செல்லும்போது பீடங்களுக்குப் பிரிந்து செல்லும் பிரதான பகுதியில் தமிழ் மொழியில் காட்சி கொடுத்த கல்வெட்டு அவசர அவசரமாக அகற்றப்பட்டு மறுபக்கம் மாற்றப்பட்டுள்ளதுடன், முன் பகுதியில் சிங்கள மொழி கல்வெட்டும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (100)





உடனடி வேலைவாய்ப்பு

எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு

- Sales Manager - 01
  - கிளிநொச்சி வதிவிடமாக இருத்தல் அல்லது கிளிநொச்சி சென்று வரக்கூடியவராக இருந்தாலும் விரும்பத்தக்கது.
  - கிளிநொச்சி சென்று வேலை செய்யக்கூடியவராக இருத்தல்.
  - 5 வருட கால அனுபவம்.
  - கணக்கியல் பட்டதாரிக்கு முன் உரிமை வழங்கப்படும்.
- Laptop/ Computer Hardware Technician - 02
- Accountant (Credit Manager) - 01
- Hardware Technician Mannar - 01

மேலும் EPF, ETF வழங்கப்படும்.
தங்களது தகதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

தங்களது விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

தபால் மூலம்
194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North

Email – info@nit.lk
Contact No - 077 542 7426

# தமிழ் மக்களுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதவர்களாக முஸ்லிம் தலைவர்கள் உள்ளனர்

## மௌலவி முபாரக் அப்துல் மஜீத் சாடல்




சாணக்கியன், சுமந்திரன் போன்றவர்கள் தங்களுடைய இனத்தவர்கள் செய்யும் காரியங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் மௌனம் காப்பது சிறந்ததல்ல என ஐக்கிய காங்கிரஸின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு –

முஸ்லிங்களுக்கு ஆதரவானவர்கள் போன்றுகாட்டிக்கொள்ளும் சாணக்கியன், சுமந்திரன் போன்றவர்கள் தங்களுடைய இனத்தவர்கள் செய்யும் காரியங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் மௌனம் காக்கின்றமை சிறந்ததல்ல. பொத்துவில் பொலிகண்டி ஆர்ப்பாட்டத்தின் போதே அவர்களின் சுயரூபம் வெளி வந்தது.

எமது நாட்டின் அரசாங்கம் கொரோனா அலையின் பலத்தபின்னடைவின்மத்தியிலும்ஸ்திரத்தன்மையுடன் இருக்கிறது. கடந்த நல்லாட்சி காலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த அரசாங்கம் சிறப்பாக உள்ளது.

நல்லாட்சி காலத்தில் இனவாதம் தலைதூக்கி சிறுபான்மைக்கு எதிரான அரசாங்கமாக இருந்தது. திருகோணமலை சண்முகா பாடசாலை விடயம் ஆரம்பித்த காலத்தில் இனவாதிகளின் கை ஓங்கியிருந்தது.

ரிசாத், ஹக்கீம், ஹலீம், கபீர் காஸிம், மஹ்ரூப் போன்ற பலரும் அமைச்சர்களாக இருந்தும் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமலே இருந்தது. ஆனால், இந்த அரசாங்கத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிங்கள் யாரும் அமைச்சரவையில் இல்லை. ஆனாலும், அவர்களின் காலத்துடன் ஒப்பிடும் போது சிறுபான்மையினருக்கு இந்த அரசாங்கத்தில் பிரச் சினை குறைவாகவே உள்ளது. அவர்களால் நல்லாட்சி காலத்தில் பூச்சாண்டி காட்டியதைத் தவிர சமூகத்துக்கு எதையும் சாதிக்க முடியாமலே போனது.

தமிழ் மக்களுடன் இணக்கப்பாட்டுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதவர்களாகவே முஸ்லிம் தலைவர்கள் இருக்கிறார்கள். சம்பந்தன் வீட்டில் புரியாணி சாப்பிடும் ஹக்கீம் நினைத்தால் இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க முடியும்.

நாடு கடந்த டயஸ்போறாக்களின் முகவர்களாக இருக்கும் இவர்களுக்கு சமூகத்தை பற்றிய கவலைகள் இல்லை. பதவிகள் மீதும், பணத்தின் மீதுமே பற்றுள்ளது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேர்தலுக்கு அஞ்சும் அரசு

எந்தத் தேர்தலை நடத்தினாலும் ராஜபக்ஷ அரசு மண் கவ்வும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா அடித்துக் கூறுகின்றார்.

எந்தத் தேர்தலை எதிர்கொண்டாலும் அது ஆளும் தரப்புக்கு நெருக்கடியாக இருக்கும் என்பது வாஸ்தவம் தான். அரசியல் களநிலைவரம் அப்படித்தான் இருக்கின்றது.

ஆனாலும் எந்தத் தேர்தல் நடந்தாலும் அதனை முழுமையான வெற்றியாக்கி – ராஜபக்ஷக்களின் அதிகாரத்தை அடியோடு வெட்டி ஒதுக்கி, அடக்கும் – தயார் நிலையில் தமது எதிரணித் தரப்பு இல்லை என்பதையும் சஜித் பிரேமதாஸா மறந்து விடக் கூடாது.

ராஜபக்ஷக்களின எதேச்சாதிகாரப் போக்கு, தீர்க்கதரிசனமற்ற செயற்பாடுகள், ஊழல் – மோசடி, குழப்பகரமான ஆட்சி முறை, நாட்டின் மிக மோசமான பொருளாதார நிலைமை போன்றவை காரணமாக ஆளும் தரப்பு மீது மக்களின் வெறுப்பு உச்சமாக இருக்கின்றது என்பது உண்மை தான்.

அதை மட்டுமே நம்பி வெற்றி தங்கள் பக்கத்திற்குத்தான் என்று பேசுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா.

தமது பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை மட்டுமல்லாமல் – அதன் கூட்டமைப்பில் உள்ள தோழமைக் கட்சிகளை மட்டுமல்லாமல் – எதிரணியில் இருக்கும் பிற கட்சிகளையும் ஒன்றிணைத்து, இப்போதைய ஆளும் தரப்புக்கு மாற்று நாங்கள்தான் என்று மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் பாங்கை சஜித் தரப்பு இன்னும் வளர்த்துக் கொண்டால் மட்டுமே ஆட்சி மாற்றமும் நிர்வாக மாற்றமும் எதிர்காலத்தில் சாத்தியமாகும்.

எனினும் சஜித் பிரேமதாஸா சுட்டுவது போல தேசிய மட்டத் தேர்தல் ஒன்றைச் சந்திப்பதற்கு அரசு தயார் இல்லை, அஞ்சுகின்றது என்பதும் உண்மையே.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய ராஜபக்ஷக்கள், அடுத்த வாய்ப்புக் கிடைத்த முதல் நாளே நாடாளுமன்றைக் கலைத்துப் பொதுத் தேர்தலை அறிவித்தனர். கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு மத்தியிலும் ஒற்றைக் காலில் நின்று அவசரப்பட்டு பொதுத் தேர்தலை நடத்தி முடித்து, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டனர்.

அதை வைத்துக் கொண்டு இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து தேவையான அதிகாரங்களை எல்லாம் சுவீகரித்தும் கொண்டனர்.

ஆனால், எல்லாம் இரண்டு ஆண்டுகள்தாம். கிடைத்த அளவுக்கு மீறிய தேர்தல் வெற்றிகள், அதிகாரங்களை வைத்துக் கொண்டு நாட்டின் நிர்வாகத்தையே போட்டுடைத்தார்கள். அவர்களின் திமிர்த்தனமான – எதேச்சாதிகார – போக்கினால் நாட்டின் பொருளாதாரமே அழிந்து விட்டது. நாடு வங்குரோத்து நிலைக்குப் போய் பிச்சை எடுக்கும் கட்டம். வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மிகவும் மோசமான பொருளாதார நிலைமை இப்போது.

மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிரான கோபத்தின் உச்சியில் இருக்கின்றார்கள் என்பது சந்தேகத்துக்கு அப்பால்பட்ட விடயம். அது ஆட்சியாளர்களுக்கும் நன்கு தெரியும்.

ஆரம்பத்தில் தேர்தல்களை நாடி ஓடிய ராஜபக்ஷக்கள், மக்கள் தீர்ப்பை வெளிப்படுத்தும் தேர்தல் என்றால் இப்போது ஒடி ஒளிக்கின்றார்கள்.

இந்த அரசிடமிருக்கும் நாடாளுமன்றப் பலத்தின் அடிப்படையில் அது நினைத்தால் அடுத்த ஒரு மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை அறிவித்து, அதனை முன்னெடுக்க முடியும். ஆனால் அதிகாரத்துக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கழித்தும் அரசு அதனைச் செய்யாது, ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றது.

இப்போது நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்களையும் ஓராண்டுக்குத் தள்ளிப் போட்டிருக்கின்றது அரசு.

தேர்தல்களை – மக்கள் தீர்ப்பை – எதிர்கொள்ள ராஜபக்ஷக்கள் அஞ்சுகின்றனர் என்பது வெள்ளிடைமலை.

## தமிழ் மக்கள் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு நாளை இளங்கலைஞர் மண்டபத்தில் கூட்டமாம்!

### அனைவரையும் அழைக்கிறார் சுரேஸ் க.பிறேமச்சந்திரன்



இலங்கையின் சமகால அரசியல் நிகழ்வுகளில் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு, இந்த விடயத்தில் இந்தியாவின் வகிபாகம், சர்வதேச, பிராந்திய அரசியல் நிலைவரங்கள் போன்ற பல விடயங்கள் குறித்து தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஒருங்கிணைத்து நாளை (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு, கல்வியங்காடு இளங்கலைஞர் மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள்.

இவர்களுடன் அரசியல் ஆய்வாளர்களும் தமது கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள இருக்கின்றார்கள்.

-இவ்வாறு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கின்றார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பௌத்த அடிப்படைவாதம், சிங்கள-பௌத்த மேலாதிக்கம் போன்றவற்றில் ஊறித் திளைத்திருக்கும் அரசு, நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. உரமின்மையால் விவசாயம் பொய்த்துப்போய், நாட்டின் ஒட்டுமொத்த விவசாயிகளும் நடுத்தெருவிற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சீமெந்து இன்மையால் கட்டுமானங்கள் அனைத்தும் அரைகுறையில் நிற்கின்றன. இதனால் கட்டுமானத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பால்மா, எரிபொருள்களை தேடிப்பிடிப்பதே முயல்க் கொம்பாக உள்ளது. அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. சகல பொருள்களும் கறுப்புச் சந்தையில் விலையுயர்ந்த நிலையில் விற்கப்படுகின்றன.

நாட்டில் அரசாங்கம் என்ற ஒன்று இருக்கிறதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஆனாலும்கூட நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து, பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படை எண்ணம்கூட அரசிடம் இல்லை. இந்தியா, சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ் என பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நிலையில்தான் இலங்கை அரசு உள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு ஒன்றை நோக்கிப் பயணிப்பதில், தமிழ்க் கட்சிகள் என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? இதற்கான வழிமுறைகள் என்ன? எங்கே ஆரம்பிப்பது போன்ற பல விடயங்களை இந்தக் கருத்தரங்கில் ஆராய இருக்கின்றார்கள். அனைவரும் கலந்து கொண்டு நமக்கான கருத்தரங்கைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.- என்றுள்ளது.

## சதொச விற்பனை நிலையத்தில் வாடிக்கையாளர் மீது தாக்குதல்!

### வவுனியாவில் சம்பவம்




வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்ய சென்றவர் மீது அங்கு கடமையில் இருந்த உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள சதொச விற்பனை நிலையத்துக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்ற வாடிக்கையாளரொருவர் அங்குள்ள பொருள்களின் விலைகள் தொடர்பில் கடமையில் இருந்த ஊழியரிடம் கேட்டுள்ளார்.

இதன்போது ஊழியருக்கும் வாடிக்கையாளருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் ஊழியர் வாடிக்கையாளரைத் தாக்கியுள்ளார். இதன் காரணமாக வாடிக்கையாரின் கால் பகுதியில் காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்நிலையில் வவுனியா பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் சதொச முகாமையாளரிடம் கேட்டபோது, தாம் மேலிடத்து உத்திரவின்றி கருத்து கூறமுடியாது எனத் தெரிவித்தார்.

## ரிக் - ரொக் போன்ற சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த நாட்டில் சட்டங்கள் வேண்டும்

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்து

பாரிய கலாசார, சமூக மற்றும் தேசிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் ரிக் - ரொக் போன்ற சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயத்தில் உடனடி கவனம் செலுத்தி சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டிய தருணம் இது எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சமூக ஊடகங்களை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் என்று தான் வாதிடவில்லை என்றும் ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் பொறிமுறையே காலத்தின் தேவை என்றும் அவர் கூறினார்.

# தன்னையே மறந்து கண்ணையே கொடுத்த கண்ணப்பர்

– மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா –
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

உலகிலே பல மொழிகள் காணப்படுகின்றன. அந்த மொழிகளில் எங்கள் தமிழ் மொழியும் ஒன்றாகும். ஏனைய மொழிகளுக்கெல்லாம் இல்லாத ஒரு பெருமையை எங்கள் தமிழ் மொழி பெற்றிருக்கிறது. எல்லா மொழிகளுமே இலக்கியத்தைக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த இலக்கியங்களால் அந்த மொழிகளும் பெருமையையும் பெற்றிருக்கின்றன. அப்படிப் பெருமையைப் பெற்றாலும், தமிழ் பெறும் பெருமைக்கு ஈடாக முடியாது என்பதுதான் கவனத்துக்குரியதாகும். ஏனைய மொழிகளை விட தமிழ் மொழி அப்படி என்னதான் முக்கியத்துவத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது? அதுதான் பக்தி இலக்கியம் ஆகும். பக்திக்கு என்று இலக்கியங் கண்ட உலகின் ஒரே மொழி எங்கள் தமிழ்மொழி மட்டுமேயாகும்.

இலக்கியம் என்றால் ஒரு இலக்கை நோக்கி அழைத்துச் செல்லுவது என்றுதான் அறிஞர்கள் சொல்லுவார்கள். இலக்கியம் என்னும் பொழுது அதில் பக்தியைப் புகுத்த வேண்டும் என்னும் சிந்தனை புதியதோர் சிந்தனை. அதனைத் தமிழ் சமூகத்தார் செய்திருக்கிறார்கள் என்பதிலிருந்து அவர்களின் மனப்போக்குப் புலப்பட்டு நிற்கிறது. சுவைத்துப் படிக்கும் இலக்கியத்திலும் பக்தியானது இருக்க வேண்டும் என்னும் கருவானது மிகவும் உன்னதமான ஒன்று.

எப்படியும்வாழலாம்என்றுவாழும்வாழ்க்கையை விட இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழுதல்தான் சிறந்த வாழ்வாகும். அப்படி வாழும் வாழ்வினைத்தான் வையத்துள் வாழ்வாங்கு வாழுதல் என்கின்றோம். அப்படி வாழ்வதற்கு உரிய வழியக் காட்டிடக் கைகொடுத்து நிற்கும் நிலையில் முகிழ்த்ததுதான் பக்தி இலக்கியம் என்னும் புதுக்கரு.

பக்தியினால் பக்குவம் வருகிறது; பண்பு வளர்கிறது; அன்பு துளிர்க்கிறது; உயர்வு - தாழ்வு அகல்கிறது; தர்மம் செழிக்கிறது; அறம் மலர்கிறது; விருந்தோம்பல் சிறக்கிறது; ஒழுக்கம் உயர்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நல்லதோர் சமூகமே உருவாகிறது.

இவை எல்லாவற்றையும் மனமிருத்தி பக்தி இலக்கியப் பாதையிலே ஒருவர் ஆசையுடன் பயணிக்கிறார். அந்தப் பயணத்தை அவர் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் யாவருக்கும் பயன்படும் வண்ணம் ஆக்கியும் விட்டிருக்கிறார் என்பது இங்கு நோக்கத்தக்கதாகும். அப்படி பயணித்த அவர் பக்தியினால் ஒரு பரிசையும் எமக்கெல்லாம் வழங்கியும் நிற்கிறார். அந்தப் பரிசு என்ன? அதுதான் பெரிய புராணம். பக்தியின் பரிசாக எமக்கெல்லாம் பயனுற வழங்கியர்தான் சேக்கிழார் பெருமான்.. இவரின் பரிசின் பெருமை காரணமாக பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ என்று தமிழுலகமே இவரை வியந்து போற்றி நின்றது.

நாயன்மார்களும் பக்தியினைப் பாடினார்கள். ஆழ்வார்களும் பக்தியினைப் பாடினார்கள். அவர்களின் பக்தியின் அனுபவம் வேறாக இருந்தது. அந்த அனுபவங்கள் அத்தனையும் அவர்களுக்கு வாய்த்த அனுபவங்களின் வெளிப்பாடாக வேதான் இருந்திருக்கின்றன. ஆனால் சேக்கிழார் காட்டும் பக்தி அனுபவமும் அதற்காக எடுத்துக் கொண்ட முறையும் முற்றிலும் வேறுபட்டதாகவே காணப்படுகிறது. ஆண்டவனின் அருளை அடியார்கள் தங்களின் திருப்பாடல்கள் வாயிலாக எமக்கெல்லாம் காட்டி நின்றார்கள். அந்த



அடியார்களையும் அவர்களின் பக்தியின் நிலையையும், பக்குவத்தையும் யாவருக்கும் காட்டும் புதிய உத்தியையேவெளிப்படுத்தும்விதத்தில்சேக்கிழாரின் செயலமைந்தது என்பதுதான் இங்கு முக்கிய திருப்பம்.

சேக்கிழார்காட்டும்அடியார்கள்ஒவ்வொருவருமே ஒவ்வொரு விதமானவர்கள். அவர்களின் சிந்தனைகள், செயல்கள் அனைத்துமே மாறுபாடானவை. ஆனால், அவர்கள் அனைவரையும் பக்தி என்னும் ஒரு குடைக்கீழ் வந்து நிற்கச் செய்கிறார் சேக்கிழார் என்பதுதான் மிகவும் சிறப்பாகும். அப்படி அவரின் குடைக்குள் வந்து நிற்கும் வித்தியாசமான



## இன்று அவரது குருபூசைத் தினம்

ஒரு அடியார்தான் , தன்னையே மறந்து கண்ணையே கொடுத்த கண்ணப்பர்.

பெரியபுராணத்தில் பல அடியார்களின் பக்தியின் நிலையைப் பார்க்கலாம். ஆனால் கண்ணப்பரின் நிலையை இக்காலச் சமூகத்தார் ஏற்றுக் கொள்ளுவார்களா என்னும் கோணத்தில், சேக்கிழாரின் அடிச்சுவட்டில் நாமும் பயணித்து, சேக்கிழாரின் சிந்தனை எப்படி அமைகிறது என்பதைப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

சரியை, கிரிகை, யோகம், ஞானம் என்னும் படிமுறைகளில் அடியார்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் பக்தி செய்யும் பாங்கும் இருந்திருக்கிறது என்பதுதான் பொதுமையான கருத்து நிலையாகும். இந்த படிமுறைக்குள்தான் ஏதாவது ஒன்றில்தான் எங்களின் பக்தியின் பாதையும் அமைந்து இருக்கிறது. இந்தப் படிமுறைகளை பற்றிக் கற்றுணர்ந்தவர்களே பெரும்பாலும் அறிந்தவர்களாக இருப்பார்கள். சாதாரண மானவர்களோ தங்களுக்குப் பொருந்தும் வண்ணம் பக்தியைன வெளிப்படுத்தி நிற்பார்கள். பக்தியெனும் பொழுது அங்கே அறிவு முக்கியமாக அமையாது. உணர்வுதான் மேலோங்கி, முக்கியமாகி முன் வந்து நிற்கிறது என்பதுதான் யதார்த்தமாகும். இவ்வாறு உணர்வு எழும் நிலையிலும் எழுகின்றவர்களின் தன்மைக்கு ஏற்பவே அது அமையும் என்பதுதான் முக்கியமாகும். ஒருவர் உணர்வு மேலீட்டால் செய்வது போன்று இன்னொருவரும் செய்வார் என்று எதிர்பார்த்திடவே கூடாது. இந்த நோக்கில்தான் சேக்கிழார் கண்ணப்பரை நோக்குகிறார். எங்களுக்கும் காட்டுகிறார்.

**வெல் படைத் தறுகண் வெஞ்சொல்**
**வேட்டுவர் கூட்டம் தோறும்**
**கொல் எறி குத்து என்று**
**ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்**

- கண்ணப்பர் பிறந்த சூழலை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து சேக்கிழார் காட்டுவது மிகவும் முக்கியமான கருத்தெனலாம். கொல், எறி, குத்து என்னும் ஓசைதான் அங்கே முன்னிற்கும் ஓசையாகக் காட்டப்படுகிறது.

**மைச்செறிந் தனைய மேனி**
**வன்தொழில் மறவர் தம்பால்**
**அச்சமும் அருளும் என்றும்**
**அடைவிலார் உடைவன் தோலார்**
**பொச்சையி னறவும் ஊனின்**
**புழுக்கலும் உணவு கொள்ளும்**
**நச்சழற் பகழி வேடர்**

கண்ணப்பரின் வேடர் கூட்டம் கரிய மேனியைக் கொண்டவர், அச்சம் என்பது அவர்களிடம் இல்லை. அதேவேளை அருளுங்கூட அவர்களிடம் இல்லை. அவர்கள் தொழிலே கொடுந்தொழிலாகவே இருப்பதாய் சேக்கிழார் படம் பிடிப்பதுபோல் ஆரம்பத்திலே காட்டி நிற்கிறார். அதுமட்டுமல்ல கண்ணப்பரின் தகப்பன் குற்றமே குணமாகக் கொண்டிருக்கிறானாம். காரணம் அவனின் இந்தப பிறவியில் அவனுக்கு வாய்த்த சூழலேயாகும். அதனால் அவன் கொலை செய்யவும் அஞ்சா நிலையினை உடையவனாகவே காணப்படுகிறான். அப்படி இருக்க அவனுக்கு எப்படி கண்ணப்பராகப் போகின்றவர் பிள்ளையாகப் பிறக்க முடிந்தது என்னும் ஐயம் எழுத்தானே செய்யும்? அதற்கும் பொருத்தமாய் சேக்கிழார் பதிலினைப் பகர்ந்து நிற்கிறார்.

**பெற்றியால் தவமும் செய்தான்**
**ஆயினும் பிறப்பின் சார்பால்**
**குற்றமே குணமா வாழ்வான்**
**கொடுமையே தலைநின் றுன்னான்**

முற்பிறப்பில்செய்த தவப்பயனால்தான் கண்ணப்பர் அவனுக்குப் பிள்ளையாக வாய்க்கும் நல்வாய்ப்புக் கிடைத்திருக்கிறதாம் என்பதையே பெற்றியால் தவமும் செய்தான் என்று சேக்கிழார் தகுந்த பதிலாகக் காட்டுகின்றார். ஆனால் இப்பிறப்பில் கண்ணப்பரின் தந்தையின் இயல்பு வேடர்க்குரியதாகவே ஆகிவிட்டது என்பதையும் சேக்கிழார் காட்டி நிற்கத் தவறவே இல்லை என்பதைத்தான் இப்பாடலின் அடுத்த வரிகள் சுட்டுகின்றன.

வேடர் குலத் தலைவனுக்கு எல்லா வளமும் இருந்தும் பிள்ளைச் செல்வம் இல்லா நிலையில் தங்களின் குலதெய்வமான முருகக்கடவுளை வேண்டி நிற்கிறான். அவனின் முன்வினைப் பயனாக ஒரு ஆண்குழந்தை பிறக்கிறது. வேடர் குலமே ஆனந்தப் பரவசப்பட்டு நிற்கிறது. பிறந்த குழந்தையை தந்தை ஆசையுடன் தூக்குகிறான். அந்தக் குழந்தை மற்றைய குழந்தைகள் போலல்லாமல் கனமாக அதாவது திண்மையாக இருந்த படியால் திண்ணன் என்று பெயர் சூட்டி மகிழ்கிறான். வேடர் குலமே திண்ணன், திண்ணன் என்று வானைத் தொட கோமிட்டு நிற்கிறது.திண்ணன் என்னும் பெயரும் கூட பின்னால் வரப்போகின்ற நிகழ்வுக்கு கட்டியங்



கூறுவதாக அமைகிறதோ என்பதும் சிந்திக்க வேண்டியதேயாகும். தன்னையே இழக்கும் திடம் அதாவது திண்ணம் அவனின் கருவிலேயே கருக்கொண்டு விட்டிருக்கிறது என்பதைத்தான் தந்தையின் வாயிலிருந்து அந்தக் குழந்தைக்குப் பெயராக வாய்ததோ என்றும் எடுத்துக் கொள்ளும் நிலையும் இருக்கிறதல்லவா?

திண்ணன் வளர்கிறான். வளர்ந்த திண்ணன் வேடர்குல வழக்கப்படி காட்டுக்குக் கன்னி வேட்டையாடச் செல்கிறான். அவனுடன் வேடர்கள் பலர் செல்கிறார்கள். வேட்டை நாய்களும் செல்லுகின்றன. திண்ணனின் அணுகு தொண்டராக நாணன் என்பவனும் காடன் என்பவனும் கூடவே செல்கிறார்கள். வேட்டையின் பொழுது முரட்டுப் பன்றி ஒன்றினால் திண்ணனும் கூட்டமும் களைத்தே போகும் நிலை உண்டாகிறது. களைத்தாலும் திண்ணனின் தீரத்தால் அந்த மூர்க்க மானபன்றி குத்திக் கொல்லப்படுகிறது. களைத்த திண்ணன் நீரருந்தும் இடத்தை நாட நிற்கும் நிலையில் அவனுடன் வந்த நாணன் பக்கத்தில் பொன்முகலி ஆறு இருக்கிறது என்னும் செய்தியைச் சொல்லி அவனை அழைத்துச் செல்லுகிறான். ஆற்றில் நீருண்டு களைப் பாறும் திண்ணனுக்கு அங்கிருக்கும் மலைபற்றிச் சொல்லுகிறான். திண்ணனும் மலையிலேறி மலை வளத்தைப் பார்த்திட விரைகிறான். அங்கு குடுமித்தேவரைக் காணுகிறான். அதன் பின் அவன் எப்படியெல்லாம் நடந்து கொள்ளுகிறான் என்னும் கதைகளை நாம னைவருமே நன்கு அறிந்து வைத்திருக்கிறோம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# வலுவான அரசியல் நிலைப்பாட்டைத் தமிழர்கள் எடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்!



## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து

இன்று தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இக்கட்டான காலகட்டத்தில் இலங்கையரசு தமிழ் மக்களின் இருப்பை இல்லாது செய்வதற்கு முயற்சி எடுப்பதுடன் தங்களுக்கான சர்வதேச ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான பிரசாரங்களை மிகவும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தமது நலன்சார் வலுவான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். அரசு தொல்பொருள் திணைக்களம் மற்றும் வேறு பல திணைக்களகங்கள் ஊடாகவும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதில் அரசு தீவிரம் காட்டிவருகின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன். இது தொடர்பில் அவர் வழங்கியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

குறிப்பாக முல்லைத்தீவு மற்றும் கிழக்கு மாகணத்தில் தனது வேலைத் திட்டத்தை தீவிரமாக அரசு செயற்படுத்தி வருகின்றது. இதனூடாகத் தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை இல்லாது செய்ய அது முனைகின்றது.

மறுபுறத்தில் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் இடையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்காமல் தாமதப்படுத்துவதனூடாக அந்த இருதரப்பினர்களுக்குமிடையில் முரண்பாட்டை உருவாக்குகின்றது.

இது போன்ற பல விடயங்களில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லாது செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுவருகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் பலத்தினையும் உறுதிசெய்வதற்கு நாளை சனிக்கிழமை, காலை 9.30 மணிக்கு இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் அரசியல் ஆய்வாளர்களும் கலந்து கொள்ளும் முதலாவது கருத்தரங்கில் கலந்துகொள்வதன் மூலம் கருத்துக்களுக்கு வலுச்சேர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.

# பணி பகிஷ்கரிப்பிற்கு மத்தியிலும் தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டம்!

சுகாதாரத் தொழிற்சங்கங்கள் சில ஆரம்பித்திருக்கும் பணி பகிஷ்கரிப்பு கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது என சுகாதாரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நாட்டில் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார வழிமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரான விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், இதுதொடர்பாக விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவிக்கையில், கொவிட் தொற்றைக் கண்டறிவதற்கான பரிசோதனையை மேற்கொள்வதற்குத் தேவையான ரெப்பிட் அன்டிஜன் கருவிகளுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை என்றும் கூறினார்.

# தன்னையே மறந்து .........

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

திண்ணன் என்னும் வேடன், ஒரு காடன், எப்படி இவ்வாறு ஆகினான் என்பதுதான் அனைவரின் மனத்திலும் இன்றுவரை எழுந்து கொண்டே இருக்கும் கேள்வி. கொத்து, வெட்டு, கொல்லு என்னும் சூழலைக் கொண்ட இடத்தில் பிறந்தவன். அன்பு என்றால் என்னவென்றே விளங்காதவன், சமயம் தெரியாதவன், தத்துவம் என்றால் என்னவென உணராதவன், எப்படித் தன்னையே மறந்தான், தன் கண்ணையே பிடுங்கினான்! புரியாத புதிராக இருக்கிறதல்லவா? அன்பு என்பது சாதாரணமானது அல்ல! இதனால்த்தான் அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்றார் வள்ளுவப் பேராசான். மாறா அன்பு ஒருவரிடம், ஓர் இடத்தில் ஏற்பட்டுவிடுமானால் அந்த நிலையில் செய்யப்படும் அனைத்துமே வியப்புக்குரியன்வாக, நினைத்துமே பார்க்க முடியாதனவாகவேதான் அமைந்துவிடும். அந்த வியப்பையே திண்ணன் தன் கண்ணைப் பிடுங்கி அப்பிய நிலையும் கூட.

தவமிருந்து பெற்ற பிள்ளையைத் தாய் பிடிக்க, தந்தை வாளால் வெட்டுகிறார்.நடக்குமா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? எப்படி நடந்தது ? தன்னை மறத்தலும், தன்னையே இழத்தலும்தான் இதன் அடிப்படை

**முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்**
**மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்**
**தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே**

தன்னை மறக்கும் நிலை பற்றி இத்திருப்பாடலின் கருத்தாகவேதான் திண்ணனின் செயலும் அமைந்திருக்கிறது.

நல்வினையும் , தீவினையும், ஆன்மாவைப் பற்றியபடியேதானிருக்கும். நல்வினை இறை நாட்டத்துக்கு அழைத்துச் செல்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கும்.அவ்வேளை தீவினை தடுத்திட முன்வந்து நிற்கும். நல்வினை முந்திக்கொள்ளும் பொழுது தீவினை செயலற்றுப் போய் விடுகிறது. ஆண்டவனை ஆன்மா அடையும் பொழுது நல்வினையினையையும் விட்டு விட வேண்டும். இருவினைகளும் அறும் பொழுது இறை நிழல் ஆன்மாவுக்கு வாய்க்கிறது என்பதுதான் தத்துவ நிலையாகும். திண்ணன் என்னும் ஆன்மாவைச் சுற்றி நாணன் என்னும் நல்வினையும், காடன் என்னும் தீவினையும் நிற்கிறது. பன்றியைக் கொன்று காடனிடம் ஒப்படைத்த பின்னர் திண்ணன் என்னும் ஆன்மாவுக்கு நாணன் என்னும் நல்வினைதான் மலையைக் காட்டுகிறது. குடுமித் தேவர் இருக்கிறார் என்பதையும் சொல்லுகிறது. திண்ணன் என்னும் ஆன்மாவை நாணன் என்னும் நல்வினை கூட்டிச் செல்லுகிறது ஆனால் ஒரு கட்டத்தில் நல் வினையாகிய நாணணனையே ஆன்மாவாகிய திண்ணன் ஒதுக்கியே விடுவதையே காண்கிறோம். நல்வினையும், தீவினையும், ஒதுக்கப்பட்ட நிலையில்த்தான் இறைவனை ஆன்மாவால் நெருங்க முடிகிறது. இறைவனின் அருளுக்கும் பாத்திரமாகவும் முடிகிறது. இவ்வாறு தான் கண்ணை அப்பிய கண்ணப்பரை நாம் பார்க்க வேண்டும்.

**கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்**
**ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**

கண்ணப்பரின் நிலைக்கு மிகவும் பொருத்தமாக இத்திருப்பாடல் இருக்கிறது. திண்ணன் என்னும் பெயருடன் இருந்த வேடன், கண்டதும் தன்னை இழந்து, தன் கண்ணையே இழக்கிறான் எனும் பொழுது அவனிடத்து ஏதாவது எதிர்பார்ப்பு இருந்திருக்கிறதா என்றால், அங்கு எதுவுமே இல்லை என்றுதான் விடை சொல்ல வேண்டும். வீடும் வேண்டா விறல் என்பதுதான் கண்ணை அப்பிய நிலையில் திண்ணனிடம் காணப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருத்தமாய் அமைகிறது. குடுமித் தேவரின் கண்ணிலிருந்து இரத்தம் வடிவதற்கு உரிய மருந்து தன்னுடைய கண்ணைப் பிடுங்கி வைப்பதுதான் என்று எண்ணினானே அன்றி , பிடுங்கி வைத்தால் தனக்கு அதனால் பெருவரமோ, அல்லது உரமோ கிடைக்கும் என்று அவன் கருதவேயில்லை. இதனால்தான் இறைவனாலே ஆட்கொள்ளப்பட்டு ஆறாம் நாளே முத்தியின்பத்தைப் பெறும் நிலைக்கு ஆளாகியும் விடுகிறான்.

கண்ணை அப்பிய வேடன் திண்ணன் கண்ணப்ப நாயனார் என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டு அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய் குருபூசை செய்து வணங்கும் நிலைக்கு வந்தமை என்பது எதனைக் காட்டுகிறது? அப்பளுக்கில்லா, ஆசையில்லா அன்பின் உச்சநிலையினையே காட்டுகிறது என்பதுதான் உண்மையாகும். இதனால்தான் அன்பு என்று வரும்பொழுது அங்கே கைகாட்டப்படும் நிலை கண்ணப்பருக்கு மட்டுமே உரித்தாகி நிற்கிறது. கண்ணப்பரை அன்புக்காகக் கை காட்டுபவர் யார் தெரியுமா? அவர்தான் மெய்தானரும்பும் வண்ணம் திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமான்.

**கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

கண்ணப்பரை மணிவாசகர் காட்டினார். எம்பெருமானே கண்ணப்பரின் அன்பின் உயர்வைக் காட்டுகின்றார் எனச் சேக்கிழார் தரும் இச்செய்திதான் மிகவும் உச்சமான உயர்வுடை செய்தியாகும். இது ஒன்றே கண்ணப்பரைக் காட்டுவதற்குப் போதுமானதாக இருக்கும்.

**அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கம் அன்பென்றும்**
**அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்**
**அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்**
**அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்**

# கொவிட் ஒமிக்ரோன் அலையில் நாடு தற்போது சிக்கியுள்ளது

நாட்டில் கடந்த 10 நாள்களில் மட்டும் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நாடு தற்போது ஒமிக்ரோன் அலையில் சிக்கியுள்ளது எனச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

டெல்டா அலையுடன் ஒப்பிடும்போது, பெரும்பாலான மக்கள் தடுப்பூசி செலுத்தப்பட்டதன் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றமை குறைவாகவே இருந்தபோதிலும், நோய்த்தொற்று ஏற்பட்டால் அறிகுறிகளைக் குறைப்பதற்காகத் தாமதமின்றி பூஸ்டர் டோஸ்களைப் பெறுமாறு சுகாதார நிபுணர்கள் மக்களை வலியுறுத்தினர்.

பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றவர்களில் இலங்கை இன்னும் குறைந்த சதவீதத்தைக் காட்டுவதாகவும் பூஸ்டர்கள் விரைவில் வழங்கப்படாவிட்டால், மருந்துகளின் அளவு ஜூலை மாதத்திற்குள் காலாவதியாகிவிடும் என்றும் சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நாடு முழுவதும் பரவும் நோய்த்தொற்றுகளின் விகிதம் கடந்த சில வாரங்களில் கணிசமாக உயர்ந்துள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் பூஸ்டரைப் பெற்றவர்கள் இன்னும் அதைப் பெறாதவர்களை விடக் குறைவான அறிகுறிகளைக் காட்டுகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், இதைப் பொருட்படுத்தாமல், ஜலதோஷம், தலைவலி, சோர்வு, தும்மல், தொண்டை வலி, தொடர் இருமல், கரகரப்பான குரல், சளி அல்லது நடுக்கம், காய்ச்சல், தலைசுற்றல், தசைவலி, வாசனை இழப்பு அல்லது மார்பு வலி போன்றவற்றால் பாதிக்கப்பட்டால் அவர்கள் உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனை செய்து, அதன் முடிவு வரும் வரை வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட வேண்டும் என வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அறிகுறிகள் தீவிரமாக இல்லாவிட்டால், மக்கள் வீட்டு சிகிச்சையைப் பெறலாம் என்றும் ஆனால் அறிகுறிகள் மோசமாக இருந்தால், அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பூஸ்டர் டோஸ் பெற்றவர்கள் மற்றும் கொரோனா நோயாளியுடன் தொடர்பு கொண்டவர்கள் தனிமைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றும் இருப்பினும் அறிகுறிகளைக் கவனிக்கவும் வீடுகளை விட்டுவெளியேறும்போது முகக்கவசங்களை அணியவும் அவர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம், இன்னும் பூஸ்டர் டோஸைப் பெறாதவர்கள் கொரோனா நோயாளியுடன் தொடர்புகொண்டவர்கள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் 10 நாள்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பைஸர் தடுப்பூசிகள் பற்றிய கட்டுக்கதைகள் மற்றும் தவறான எண்ணங்களை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவோர் பொதுமக்கள் பற்றிச் சிந்தியுங்கள்!

## ஜனாதிபதி கோட்டா உருக்கம்



பொதுமக்களைத் தவறாக வழிநடத்தி இந்த நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளிவிட, கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த சில குழுக்கள் மீண்டும் இணைந்துச்செயற்படுகின்றன என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

எவ்வாறான சவால்களை எதிர்கொள்ள நேரிட்டாலும், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப்பிரகடனத்தின் மூலம் உறுதியளிக்கப்பட்டவாறு, விவசாயப் பெருமக்களின் வருமானத்தை நூற்றுக்கு நூறு வீதத்தால் அதிகரிக்கவும் நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவும் தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுப் பேரணிகளின் 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்தவை வருமாறு–

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், பெரும் சவால்களுக்கு மத்தியில் இந்த அரசாங்கம் அடைந்த இலக்குகள் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கிலேயே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் இந்தப் பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

'மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அன்று செயற்பட்டது போன்றே, தேசிய மற்றும் சர்வதேச சக்திகளுடன் இணைந்து தற்போதைய அரசாங்கத்தின் பயணத்தைத் தடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

'அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள், எதிர் காலச் சந்ததியினரின் நலனை இலக்கு வைத்தே முன்னெடுக்கப்படுகின்றன. அதனால், எவ்வாறான தடைகள் ஏற்படினும் தொடர்ந்து முன்னோக்கி நகர்வோம்;.

'அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்கிப் போராட்டங்களை நடத்துபவர்கள், பொது மக்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். அரச ஊழியர்கள், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். புத்தெழுச்சிபெற்று வருகின்ற பொருளாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, நாட்டை முடக்காமல் அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயற்படுத்த இடமளிப்பதே இன்றைய தேவையாக உள்ளது.

– என்று தெரிவித்தார்.

### மருந்து தட்டுப்பாடு குறித்து தெளிவுப்படுத்திய அமைச்சு!

நாட்டில் மருந்து தட்டுப்பாட்டைத் தடுப்பதற்குத் தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்கு முறைக்கான இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள மருந்துகளின் தேவையைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட கால அவகாசத்தின் அடிப்படையில் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அதன் செயலாளர் வைத்தியர் சமன்ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு டொலர்களின் தேவை தொடர்பாக மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரி செயலாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னைய அறிவிப்புகளின்படி, மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கி 70 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது என இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி சமன்ரத்நாயக்க தெரிவித்துள்ளார். தற்போதைய நிலைமையை சமாளித்து மருந்து தட்டுப்பாட்டைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ், இராணுவத்தால் தடுப்பூசி அட்டை சோதனை

மட்டக்களப்பில் கொவிட்19 தடுப்பூசி அட்டை, பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் பல இடங்களிலும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது. நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் கொவிட் 19 சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவது ஒரு தற்காலிக பாதுகாப்பாக இருந்தாலும்,தடுப்பூசி ஏற்றிக் கொள்வதே உயிரிழப்புகளில் இருந்து பாதுகாப்பு ஏற்படுத்தும் என சுகாதாரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதேவேளை,பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும் என்பதுடன், மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாடு பூராகவும் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் இந்த மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை இதுவரை ஏற்றிக் கொள்ளவில்லை. தமக்கான பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஜீ. சுகுனன் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார். பொது இடங்களுக்கு வரும் மக்கள் முழுமையாக கொவிட் 19 தடுப்பூசி ஏற்றப்பட்டதை உறுதி செய் யும் அட்டையினை தம்முடன் வைத்திருக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

## நாட்டில் முட்டையின் விலை 50 ரூபா வரை எகிறலாம்

கால்நடைதீவனத்தின் விலை உயர்வால் முட்டை உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எச்.எம். பி. ஆர். அழகோன் குறிப்பிடுகிறார்.

அரிசி, சோயா, மக்காச் சோளம் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளதுடன் கால்நடை தீவன மூடை 3 ஆயிரம் ரூபாவில் இருந்து 6 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது என அவர் கூறியுள்ளார்.

நாட்டில் தினசரி நுகர்வு செய்யப்படும் எட்டு லட்சம் முட்டைகளில் கிட்டத்தட்ட 65 ஆயிரம் வடமேல் மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுவதுடன் அந்த மாகாணத்தில் சுமார் 4 லட்சம் விவசாயிகள் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

எப்படியிருப்பினும், ஒரு முட்டையின் உற்பத்தி செலவை ஒப்பிடுகையில், தற்போதைய சந்தை விலையில் முட்டைகளை விற்க இன்னும் முடியவில்லை. தொழிலைத் தக்க வைக்க முடியாமல், சுமார் 20 சதவீத உற்பத்தியாளர்கள் இத் தொழிலை விட்டு வெளியேறி விட்டனர்.

எப்படியிருப்பினும் இது தொடர்பில் அதிகாரிகள் தலையிடவில்லை என்றால் முட்டை உற்பத்தியில் ஈடுபடும் சிலர் அந்த தொழிலை விட்டு வெளியேறி விடுவார்கள்.

அதற்கமைய எதிர்வரும் நாள்களில் முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவை விடவும் அதிகமாக அதிகரிப்பதைத் தடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சண்முகா இந்து மகளிர் கல்லூரி விவகாரம்: ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்தார் ஆசிரியை!





திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஹபாயா சர்ச்சையில் பாதிக்கப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு கட்சித் தலைமையகம் தாருஸ்ஸலாமில் இடம்பெற்றது.

இதன்போது பாதிக்கப்பட்ட ஆசிரியை நீதிமன்றத்தை நாடிய போது மீண்டும் அதே பாடசாலைக்கு பணியமர்த்தியமை தொடர்பில் ஆராயப்பட்டதுடன், மேல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் தற்போதைய நிலைவரம், மாகாண கல்வி அமைச்சால் அனுப்பப்பட்டுள்ள கடிதங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், இது தொடர்பில் தொலைபேசி ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளருடன் பேசப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்குவது முட்டாள்தனம்!

## வைத்தியர் வசந்த பண்டார குற்றச்சாட்டு

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவிடம் வழங்குவது முட்டாள் தனமான தீர்மானம் என தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் பேச்சாளர் வைத்தியர் வசந்த பண்டார குற்றம் சுமத்தியுள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு–

இந்த எண்ணெய்த் தாங்கிகளை வழங்குவது தொடர்பாக மூன்று உடன்படிக்கைகள் காணப்படுகின்றன.

இரண்டு உடன்படிக்கைகள் பற்றிய விவரங்கள் மட்டுமே அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப கட்டமைப்பு உடன்படிக்கை, வரி குறித்த உடன்படிக்கை மற்றும் பங்குகளை விற்பனை செய்தல் குறித்த உடன்படிக்கை என மூன்று உடன்படிக்கைகள் காணப்படுகின்றன.

இந்த எண்ணெய்த் தாங்கிகளை வழங்குவதற்கு இந்தியாவின் முதலீடு என்ன? இது வெறுமனே எண்ணெய்த் தாங்கிகளை வழங்குவது மட்டுமல்ல. உலகின் முக்கியமான துறைமுகங்களில் ஒன்றின் செயற்பாடுகளை அவர்களிடம் ஒப்படைப்பதாகும். இந்த உடன்படிக்கைகளில் மிக மோசமான தந்திரங்கள் சூழ்ச்சிகள் காணப்படுகின்றன.

இந்திய தரப்பு எவ்வளவு முதலீடு செய்கின்றது என்பது பற்றிக் குறிப்பிடப்படவில்லை எனினும் லாபத்தில் 51 வீதம் கிடைப்பதாகக் கூறுகின்றனர்.

இதன் மூலம் யார் முகாமைத்துவம் செய்வார்கள் என்பது பற்றிய உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.

இந்த உடன்படிக்கை பற்றிய சரியான விவரங்கள் அமைச்சரவைக்கு வழங்கப்படவில்லை. நாட்டு மக்கள் மட்டுமன்றி அமைச்சரவையும் ஏமாற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் நாட்டு மக்களையும் அமைச்சரவையையும் முட்டாள்கள் என எடுக்கப்பட்ட தீர்மானமாகும் என வைத்தியர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிப் பீடம் ஏற்றுவதற்கு உதவிய அமைப்புக்களில் ஒன்றாக தேசிய அமைப்புக்கள் ஒன்றியம் கருதப்படுகின்றது.

இந்த நிலையில் திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் அபிவிருத்தி தொடர்பில் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அந்த அமைப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கிறார்களா, தமிழ் தலைவர்கள்?

## அக்கரை இக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இந்த முறை வடக்கு வாழ் தமிழ் மீனவர்கள் தொப்புள் கொடி உறவான தங்களது இந்தியச் சகோதரர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தி உள்ளார்கள். தாயும் பிள்ளையும் ஆனாலும், வாயும் வயிறும் வேறு என்ற வாழ்க்கைத் தத்துவார்த்தத்தின் வெளிப்பாடே இந்த போராட்டம். அதிலும் குறிப்பாக, நடுகடலில் நடந்த மோதலில் இரண்டு யாழ்ப்பாண மீனவர்கள் உயிரிழந்தமையைத் தொடர்ந்து, இந்தப் போராட்டம் வலுவடைந்தது. அதில் எல்லாம் நியாயமும் இருந்தது.

இந்தியா, இலங்கை என்று இரு நாட்டு தமிழ் மீனவர்கள் இடையே இந்த பிரச்சினை இனப்போர் முடிந்த கடந்த பத்தாண்டுகளாக தொடர்ந்து வந்துள்ளது. கடலில் இறங்கிப் போராட்டம் செய்வது, கொழும்பு மற்றும் யாழ்பாணத்தில் உள்ள இந்திய தூதுவர் அலுவலகங்களில் மனு கொடுத்தல் மற்றும் மறியல் செய்வது என்று மட்டுமே, பிரச்சினையின் தாக்கம் இது வரை இருந்தது. ஆனால், இப்பொழுது கடந்த சில வாரங்களாகத்தான், நடுக் கடலில் இரு நாட்டு மீனவர்களிடையே கைகலப்பு என்ற நிலை உருவாகி உள்ளது.

இது கைமீறி போகாதவாறு, இலங்கை அரசும் தமிழ் சமூகத் தலைமைகளும் பார்த்துக் கொள்ள வேண்டும். இடைப்பட்ட காலத்தில், இரு நாட்டு மீனவர்களிடையே சகோதரத்துவம் பேணப்பட வேண்டும். அதே வேளை, இலங்கை தமிழ் மீனவர்களின் உரிமைகளையும் உடைமைகளையும் பாதுகாக்கவும் ஆவன செய்ய வேண்டும்.

**பழைய மொந்தையில்**

பலரும் நினைப்பது போல், இந்தப் பிரச்சினை இனப்போரோடு மட்டுமே இணைந்தது அல்ல. அறுபதுகளில் இந்தியாவில் ட்ரோலர் எனப்படும் இழுவை படகுகள் பயன்பாட்டிற்கு வந்த காலத்திலேயே இரு தரப்பினருக்கும் நடுக்கடலில் அவ்வப்போது கை கலப்பு ஏற்பட்டதாக இரு நாடுகளிலும் அப்போது பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வந்தன.

இடைப்பட்ட காலத்தில், இனப் போராட்டம் வன்முறை வழியினை தேடிய போது, குறிப்பாக இலங்கை கடற்படை, நாட்டின் தமிழ் மீனவர்களைக் குறி வைத்து, அவர்கள் கடற்தொழில் செய்யாத வண்ணம் பார்த்துக் கொண்டார்கள். காரணம், அவர்கள் பல்வேறு போராளி குழுக்களுக்கும், பின்னர் குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் உதவியாகச் செயல்படுகிறார்கள் என்ற சந்தேகம்தான். இதனால், தமிழ் நாட்டின் தொப்புள்கொடி உறவுகளான மீனவர்களும் பாதிக்கப்பட்டார்கள். ஆனால், இலங்கை கடற்படை அவர்களையும் சந்தேகப்பட்டதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இனப்போராட்டம் முடிவுற்ற காலத்திலேயே தமிழ் நாடு மீனவாகள் முதலிலும், இலங்கை தமிழ் மீனவர்கள் பின்னரும்



இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்ய ஆரம்பித்தார்கள். அந்தக் காலம் தொட்டு, இந்திய மீனவர்கள், இலங்கை தமிழ் சகோதரர்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் அழித்தொழிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் இருந்து வந்துள்ளது. இலங்கை கடற்படையினரும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்தும் போக்கில், வன்முறைப் போக்கில் நடந்து வந்துள்ளார்கள்.

இன்று அதுவே இரு நாட்டு தமிழ் மீனவர்கள் இடையே பகை உணர்வாக பரிணாம வளர்ச்சி அடைந்து, காழ்ப்புணர்ச்சியாகவே மாறி வருகிறதோ என்ற கவலை தோன்றியுள்ளது. இதனை இப்படியே விட்டுவிடுவதா, அல்லது, பெருகி வரும் வன்மத்தை மட்டுமாவது மட்டுப்படுத்துவதா, என்பதை யாழ் தமிழ் சமூக தலைமைகளே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

இதனை அடிப்படையாக வைத்தோ என்னவோ, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் நாட்டு மீனவர்களுடன் காணொலி மூலம் உரையாடல் நடத்தி உள்ளார். இரு தரப்பினரும் தங்களது அறிந்த நிலைபாடுகளை மீண்டும் முன் வைத்துள்ளனர். இதில், ஒரு தரப்பு இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்களின் அமைச்சராக பிரதிநித்துவம் பெற்றவர். காணொலியில் பங்குபெற்ற தமிழ் நாடு மீனவர் பிரதிநிதிகள் அவ்வாறானவர் அல்லர். மாறாக, இலங்கையில் இருந்து தமிழ் மீனவர் பிரதிநிதிகள் மட்டுமே பங்குபெற்றிருந்தால், அதன் வீச்சும் ஆழமும் பிறிதாக இருந்திருக்க வாய்ப்பு இருந்தது.



**போட்டி அரசியல்**

முன்பெல்லாம், இலங்கைக் கடற்படையினருடனான, தமிழ் நாட்டு மீனவர்கள் பிரச்சினையை அங்குள்ள கட்சி தலைமைகள் தங்களது போட்டி அரசியலுக்கான பிறிதொரு தளமாகவும் அடையாளம் கண்டு செயல்பட்டு வந்தனர், என்ற குற்றச்சாட்டு எழுந்து வந்தது. அதில் உண்மையும் இருந்தது. ஆனால் இன்று நிலைமை தலைகீழ்.

தற்போது, இலங்கை தமிழ் மீனவர்களின் குறைபாடு ஒன்று என்றால், தமிழ் நாட்டு மீனவர்களின் ஆதங்கம் பிறிதொன்றாகவும் இருக்கிறது. கடற்படையால் கைபற்றப்பட்ட இந்திய மீன்பிடி படகுளை அரசு ஏலம் விடும் முடிவு, தமிழ் நாடு முழுவதிலும் ஒரு வித மௌனமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதன் அடிப்படை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 2017 இல் சமர்ப்பித்த தனி நபர் சட்ட முன்வடிவில் பிறந்தது.



சுமந்திரனின் முன்வடிவை அடிப்படையாகக் கொண்டு, அப்போதைய பிரதமர் ரணில் தற்போதைய சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதனை நாடாளுமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றியது. அதுவே தற்போது, தமிழ் நாட்டு மீனவர் படகுகள் கைபற்றப்படுவதற்கும் அதனை பொது ஏலத்தில் விற்பதற்கும் வழிசெய்துள்ளது என்றே கூற வேண்டும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை, மீனவர்கள் பிரச்சினையை அரசியலாக்குவது தற்போது வெகுவாக குறைந்து விட்டது. இலங்கைக் கடற்படையினரை எதிர்த்து அரசியல் செய்த தலைமைகள், பிரச்சினை உண்மையிலேயே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மீனவர்களின் வாழ்வாதரத்தை சார்ந்தது என்று உணர்ந்ததுமே, அடக்கி வாசிக்க துவங்கி உள்ளார்கள். தமிழக மீனவர்களும் அவ்வாறே செயல்பட்டு வருகின்றனர் எனலாம்.

இதற்கிடையே, யாழ் நிலைமை என்ன? முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, இலங்கை தமிழர் அரசியல் தலைமைகள், இங்கு குட்டையைக் குழப்பி மீன் பிடிக்க முயல்கிறது என்றே கூற வேண்டும். மீனவர்களுக்கான அவர்களது நியாயபூர்வமான ஆதரவு என்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம். அதுவே, அவர்களது அரசியல் மற்றும் தார்மீக கடமையும் கூட. அதனையே போட்டி அரசியலாக மாற்றுவது வேறு விடயம். ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல.

இந்த பின்னணியில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, மீனவர் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஒத்திவைப்பு வேளை வாபஸ் வாங்குவது என அறிவித்துள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம். தங்களது முடிவிற்கு பின்னர், இந்திய தூதரக அதிகாரி முன்னெடுத்த பேச்சுவார்த்தை இருந்ததாகவும் முன்னணி தெரிவித்துள்ளது.

விடயம் இதோடு நின்றுவிடாது, தொடர்ந்து, தமிழ் அரசியல் தலைமைகளுடன் மீனவர் பிரச்சினை குறித்து, இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்துமேயானால், அதில் முன்னணியை இனித் தவிர்க்காது எனலாம். என்றாலும் இந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை மீதான விவாதம் நடக்காமல் போனதால், நாடாளுமன்ற விவாதத்தில், கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் கட்சிகளின் தமிழ் நாடு சார்ந்த இரட்டை வேடம் அங்கே கலைக்கப்படாமலே தொடர்கிறது என்பதே உண்மை.

அந்த வகையில், கூட்டமைப்பின் குழம்பிய அரசியல் மனநிலையால், இந்திய தூதரகம், கஜன் பொன்னம்பலம் போன்ற பிற தமிழர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை துவங்குவதற்கான வாய்ப்பு அல்லது கட்டாயம் ஏற்பட்டுள்ளது எனலாம். ஆனால், முன்னணி தலைமையின் பதிமூன்றாவது திருத்தம் குறித்த நிலைபாட்டினால், தற்போதைய இந்திய முன்னெடுப்புகள் எல்லாம் மீனவர் பிரச்சினையை மட்டுமே ஒட்டி இருக்கும் என்ற எண்ணமே தோன்றுகிறது. ஆனால், யாழ்பாணத்தில், இதற்கு தானே ஆசை பட்டாய் கஜேந்திரகுமாரா? என்ற தமிழ் திரைப்பட தலைப்பை ஒட்டிய கேள்வி எழாமல் இல்லை.

(09ஆம் பக்கம் பார்க்க)

# குழம்பிய குட்டையில .......



(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அரசனை நம்பி...

இருநாட்டு மீனவர் பிரச்சினை என்பது, இரு கடற்தொழில் சமுதாயங்களை சார்ந்தது. அதற்கு அப்பால், இரு நாட்டு அரசு சார்ந்த அரசியல் பிரச்சினை. இது தவிர்க்க முடியாதது. அதே சமயம், அதனையே சர்வதேச பிரச்சினையாக ஆக்க முயல்வது, அவலை நினைத்து உரலை இடித்த கதையாகவே முடியும்.

இதற்கு அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிள்ளையார் சுழி இட்டார். கடந்த டிசம்பர் மாதம், அமைச்சர் டக்ளஸ், தலைநகர் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில், உயர் அதிகாரியான மார்ட்டின் கெல்லியை சந்தித்து இந்தியாவுடனான மீனவர் பிரச்சினை குறித்து விவாதித்துள்ளார். அவர் ஏன், அடுத்துள்ள இந்திய தூதரகத்துடன் விடயத்தை முடித்துக் கொள்ளவில்லை என்ற கேள்விக்கு விடையில்லை.

அமைச்சர் டக்ளஸைத் தொடர்ந்து, மூத்த கட்சியான இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கொழும்பில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதியான ஹன்னா சிங்கர் அவர்களைச் சந்திந்து இதே பிரச்சினை குறித்துப் பேசியுள்ளார். இது அவர்கள், இருவரிடையேயான போட்டி அரசியல் குறித்த விடயம் மட்டுமல்ல, அதற்கு அப்பால் சென்று, பிரச்சினையில் சர்வதேசத்தை மையப்படுத்த வேண்டும் என்பதில் அவர்களுக்கிடையேயான ஒற்றுமை குறித்ததும் ஆகும்.

இனப்பிரச்சினை மற்றும் போர்க்குற்றங்கள் விடயத்தில் சர்வதேசத்திடம் முறையிட்டு, தமிழ் சமுதாயம் சாதித்தது என்ன? அரசனை நம்பி, புருஷனை கைவிட்ட கதையாகத்தானே அது உண்மையில் முடிந்துள்ளது. அல்லது, எனக்கு ஒரு கை போனது என்றால், அவனுக்கு இரண்டு கைகளும் போக வேண்டும் என்ற காட்டுமிராண்டி நியாயம் அல்லவா வாதிக்கப்படுகிறது?

இவ்வளவும் போதாது என்று, அண்மையில் இலங்கைக்கான சீன தூதுவர் யாழ்பாணம் விஜயம் செய்துள்ளமையும் குட்டையை மேலும் குழப்பி உள்ளது. அண்மையில் நடைபெற்ற யாழ்பாண மீனவர்கள் போராட்டங்களுக்கும் தூதுவர் விஜயத்திற்கும் முடிச்சுப்போடும் வேலையை தமிழ்நாட்டில் சமூக ஊடகங்கள் செய்து வருகின்றன. சீனத்தூதுவரிடம் இருந்து யாழ் மீனவர்கள் நிவாரண பொதிகளை அன்பளிப்பாக பெற்றுக் கொண்ட பின்னர், இது போன்ற ஊகச் செய்திகள் தவிர்க்க முடியாதவை.

இதில் இலங்கையில் உள்ள சில தமிழ் ஊடகவியலாளர்கள், சீனா சென்று திரும்பியதற்கு பின்னர், இது போன்று யூகங்களுக்குக் கையும் காலும் முளைக்கத் தான் செய்யும். தமிழரின் ஒட்டுமொத்த நலன் மற்றும் சர்வதேச அரசியல் குறித்து பேசும் எந்தவொரு தலைவரும் இது குறித்து முன்னரே யோசித்துச் செயல்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வேணும் ஆனால் வேணாம்

இந்திய மீனவர்களுக்கு எதிரேயான போராட்டத்தை போட்டி மனப்பான்மையுடன் அணுகும் அதே வேளையில், இங்குள்ள அரசியல் தலைமைகள், இந்தியாவை முன்னிறுத்தி இனப்பிரச்சினையை வேறொரு பாதையில் கையாள முயல்கிறார்கள். அண்மையில், மீண்டும் உயிர் பெற்ற, இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தப்படும் பதிமூன்றாவது திருத்தத்தை ஒட்டிய, ஆதரவு மற்றும் எதிர்ப்பு நிலைமைகள் இதில் ஒரு பகுதியே. இதற்கு அப்பால், கடந்த தசாப்தங்களில் இனப்பிரச்சினையில், தொடர்ந்து, தமிழ் நாடு அளித்து வரும் அரசியல் மற்றும் தார்மீக ஆதரவும், இதனால், இந்திய மத்திய அரசின் மீது செலுத்தப்படும் அழுத்தமும் இதில் அடங்கும்.

அண்மையில், பதின்மூன்று குறித்த தமிழர் அரசியல் தலைமைகளின் பொது விவாதங்களின் போது, தமிழ் நாட்டு தலைவர்களான ஜெயலலிதா மற்றும் ஸ்டாலினை முன்னிலைப்படுத்தி, சில பல வாதங்கள் முன் வைக்கப்பட்டன. இது தவிர, தங்களது போட்டியாளர்களுக்குத் தெரியாமல், ஸ்டாலின் போன்ற தமிழ் நாட்டின் முக்கிய தலைவர்களைச் சந்திப்பதற்கான முயற்சிகளும் தொடர்ந்து நடந்து வருகின்றன எனலாம். இவை எல்லாம், தங்களது யாழ்ப்பாண அரசியலுக்கு வலு சேர்ப்பதற்கான முயற்சியே தவிர வேறு ஒன்றுமில்லை.

அதாவது, தங்களது இனப்பிரச்சினைக்குத் தமிழ் நாடு மற்றும் தமிழ் நாடு அரசியல் தலைமைகளின் ஆதரவு தேவை. ஆனால், மீனவர் பிரச்சினையில், இலங்கையில் அரசியல் ஆதாயம் பெறுவற்காக, அதே தமிழ் நாட்டுடன் சமருக்கு நிற்போம். இது எந்த ஊர் நியாயம்? இவர்களது செயற்பாடுகளை பார்த்தால், இந்திய அரசு மற்றும் தமிழ் நாட்டு அரசியல் தலைமைகளை முட்டாள்கள் என்றே முடிவு செய்து விட்டார்கள் என்று எண்ண தோன்றுகிறது. வடிவேலு பாணியில் கூறுவதென்றால், வேணும், ஆனால் வேணாம்.

## மாறாத நிலைப்பாடு

மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை ஆகட்டும், அல்லது அதோடு ஒட்டிய கச்சதீவுப் பிரச்சினை ஆகட்டும், இவை இரண்டிலுமே, டெல்லியில் ஆளும் இந்தியாவின் மத்திய அரசு தொடர்ந்து, இலங்கை தமிழ் மீனவர்கள் ஆதரவு நிலைமையையே எடுத்து வந்துள்ளது. இதில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், இந்திய மத்திய அரசின் நிலைபாடு ஒன்று தான். அதுவே தற்போது பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியிலும் தொடர்கிறது.

ஆனால், இந்திய அரசின் நிலைப்பாடு என்பது ஒன்று, அதனை செயல்படுத்துவது என்பது பிறிதொரு விடயம். இனப்போர் காலத்தில், இலங்கை கடற்படையினரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, இரு நாட்டு கடற்பரப்பில், வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்களின் முக்கிய தேவைகளை தமிழ்நாட்டு கடற்கரை பகுதிகளில் இருந்து கொண்டு வந்து சேர்த்த மீனவர்களுக்கு இந்த விடயம் புரியும். அப்போது, அவர்களுக்கு உதவி செய்து கடலாடிய தமிழ்நாடு மீனவர்களுக்கும் அந்த முறைமைகள் அத்துபடி.

தற்போது, குறிப்பாக இராமேஸ்வரம் மீனவர்கள் தமிழ்நாடு அரசு செயற்படுத்தி வரும் டோக்கன் சிஸ்டத்தின் அடிப்படையிலேயே கடற்தொழில் செய்ய முடியும். என்றாலும், அவர்களில் பலரும், இந்தியக் கடலோர காவல் படைக்கு டிமிக்கி கொடுத்து விட்டு, சட்டத்திற்கு புறம்பாக தொழில் செய்கிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த ஒரே வழி, இந்திய படையினர் அவர்களை கைது செய்வது, அல்லது துப்பாக்கியால் சுடுவது. இது நடைமுறை சாத்தியமா என்பது யோசிக்கப்பட வேண்டிய விடயம்.

மாறாக, இந்தியாவின் மத்திய அரசும் தமிழ் நாடு அரசும் சேர்ந்து, குறிப்பாக இராமேஸ்வரம் மீனவர்களை ஆழ்கடல் மீன் பிடிப்பு தொழிலுக்குத் தயார்ப்படுத்தி வருகின்றன. அதற்காக இரு அரசுகளும் உதவி தொகையும் பொது துறை வங்கிகள் மூலம் கடன் வசதியும் செய்து தந்துள்ளன. என்றாலும், இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு கால அவகாசம் தேவை. காரணம், வடக்கு - கிழக்கு மீனவர்களை போலவே, இராமேஸ்வரம் மீனவர்களும் நூற்றாண்டுகளாக, குறுகிய காலத்திற்கு, குறிப்பாக ஓர் இரவுப் பொழுது மட்டுமே, கடலாடி வந்துள்ளார்கள். அவர்கள், ஆழ் கடல் மீன் பிடிப்பில் பல நாள்கள், கடலில் இருந்து பழக்கிக் கொள்ளவே இந்த கால அவகாசம் தேவை. யாழ் மீனவர்கள், தங்களை தெற்கில் நீர்கொழும்பு மீனவர்களுடன் ஒப்பிட்டு பார்த்தால், நிலைமையின் வீச்சை புரிந்து கொள்வார்கள்.

இடைப்பட்ட காலத்தில், கடந்த 2016 ஆம் ஆண்டு இரு நாட்டு கடற்கரை பகுதிகளையும் தாக்கிய ஒக்கி புயலில், தென் தமிழகம், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த ஆழ்கடல் மீனவர்களில் பலர் இறந்தமை, ஒரு மாறாக சோகமாக அமைந்தது. அதனை ஓர் எச்சரிக்கையாகவும் கூட இராமேஸ்வரம் மீனவர்கள் கண்டனர். அண்மை காலத்தில், குறிப்பாக தமிழ்நாட்டில் அரசு இயந்திரத்தின் செயற்படுகள் அனைத்துமே கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதிலேயே பெரும்பாலும் செலவிடப்பட்டதும் ஒரு காரணமே. இதற்காகவெல்லாம், தமிழ் நாட்டு மீனவர்களின் தொடர் அத்துமீறல்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பது பிறிதொரு விடயம்.

## கச்சதீவு சொல்லும் செய்தி

இதில் குறிப்பாக கச்சதீவு கூறும் செய்தி ஒன்று உள்ளது. இலங்கை அரசின் நிலைபாடுகளுக்கு அப்பால், வடக்கு - கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கும் கச்சதீவுப் பிரச்சினைக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. ஆனால், அப்போதும், இப்போதும், எப்போதும், பாரதியார் பாடியது போல், சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்று கூறும் இலங்கை வாழ் தமிழர்கள் முக்கியமாக ஒரு விடயத்தை புரிந்து, செயல்பட வேண்டும்.

அறுபதுகளில், வடிவமைக்கப்பட் ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்டத்தின் கீழ், உலகின் வேறு பல நாடுகளை உள்ளிட்ட பிற நாடுகள், இந்த கடல் பகுதிகளில் எந்தவிதத்திலும் தங்களது கப்பல்களையோ, ஏன் படகுகளையோ கூட செலுத்த முடியாது. இந்த கடல் பகுதியில் வேறு எந்த நாட்டின் தலையீடு இருந்தாலும், அதனை இந்தியாவும் இலங்கையும், தடைசெய்யலாம், போரிட்டு காத்துக் கொள்ளலாம். இத்தகைய அமைப்பு ஐ.நா. கடல் சட்டத்தின் கீழ் உலகின் வேறு எந்த இரு நாடுகளுக்கும் கிடைக்காத ஒரு சலுகை என்றே சொல்ல வேண்டும். இதற்கு, அந்த நாள்களில் இருந்த, இரு நாட்டு இராஜதந்திரிகளுக்கும் கடமைப்பட்டுள்ளோம்.

தற்போதைக்கு தேவை இல்லை என்றாலும், கச்சதீவை ஒட்டிய கடல் பகுதி, இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கு சொந்தமானது. அதனை அடுத்து வரும் தலைமுறையினர் கடற்தொழில் செய்ய பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், அதிகரித்து வரும் மீனவர் பிரச்சினையலயால், தமிழ் நாட்டிலும், கச்சதீவை இந்தியா மீட்டு எடுக்க வேண்டும் என்ற குரல் அவ்வப்போது ஒலித்து வருகிறது. இது மீனவர் பிரச்சினை காரணமாக மட்டுமே தோன்றிய துணைப் பிரச்சினை.

தமிழ் நாட்டின் முதல்வராக இருந்த ஜெயலலிதா மற்றும் கருணாநிதி ஆகியோர், இது குறித்து இந்தியாவின் உச்ச நீதி மன்றத்தில் தனி நபர் வழக்கு தொடர்ந்திருந்தனர். அவர்கள் இருவரும் இறந்து விட்ட காரணத்தால் அந்த வழக்குகள் காலாவதி ஆகிவிட்டன. அவர்களை தொடர்ந்து, தமிழ் நாட்டில் இருந்து யாரும் அது போன்ற வழக்கோடு இது வரை உச்ச நீதிமன்றம் செல்லவில்லை.

ஆனால், தமிழ் நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையைச் சுட்டிகாட்டி, சர்வதேச நீதி மன்றத்திற்கு போக இருக்கிறார்கள் என, அவ்வப்போது சிலர் கூறி வருகிறார்கள். அதாவது, இலங்கைக் கடல் பரப்பில் தொடர்ந்து மீன் பிடிக்க தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் பரம்பரை உரிமை உள்ளது என்பதே வாதம். இதில் அவர்களுடைய பக்கத்திற்கு ஆதரவாகவே தற்போதைய சர்வதேசக் கடற்தொழில் சட்டங்கள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது. இதனையும் மனதில் குறித்துக் கொள்ள வேண்டும்.

இதற்கிடையே, எதிர்வரும் மார்ச் 11 - 12 திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவின் போது, இரு நாட்டுத் தமிழ் மீனவர்களும் கூடிப் பிரார்த்தனை செய்ய வாய்ப்புள்ளது. கொரோனாவைக் காரணம் காட்டி,



போலவே, இந்தியாவும் இலங்கையும் தங்களது கடல் எல்லையைத் தங்களுக்குள் பேசியே வரையறை செய்து கொண்டன. அதன் அடிப்படையில் தான், கச்சதீவு இலங்கை கடல் எல்லை பகுதிக்குள் வந்தது எனலாம். பிற நாடுகள் எல்லாம், இரு நாட்டு கடல் எல்லைக்கு இடையேயான மத்திய கோடு முறைமையின் அடிப்படையில் தங்களது கடல் எல்லைகளை பேசி முடிவுசெய்துகொண்டன. இங்கு நிலைமை வேறு.

இரு நாட்டு கடல் எல்லை குறித்த வரைபடங்களை பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். இங்கு மட்டும் மத்திய கோடு முறையை செயல்படுத்தாமையால், கடல் எல்லை கோடு, கோணலாக இருக்கும். அதன் காரணமாகவே, கச்சதீவு, இலங்கை கடல் பகுதிக்குள் வந்தது எனலாம். இதன் காரணமாகவே, சர்வதேச கடல் பரப்பாக இருக்க வேண்டிய பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகள், இந்தியா, இலங்கை என்ற இரு நாடுகளுக்கும் மட்டுமே உரிமையான கடல் பரப்பாக உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக, அமெரிக்கா, சீனா

இலங்கை அரசு, இந்திய மீனவர்களைத் தடுத்தாலும், இது குறித்து தமிழ் நாடு முதல்வர் ஸ்டாலின், பிரதமர் மோடிக்குக் கடிதம் அனுப்பி உள்ளார்.

கூட்டுப் பிரார்த்தனை மற்றும் நட்புப் பரிமாற்றம் என்பது ஒன்று, அந்தச் சந்திப்பையே மீனவர் பேச்சுவார்த்தையாக மாற்ற முயல்வது வேறு. அவ்வாறு நடக்குமேயானால், அது இரு நாடு அரசுகளின் பணியை வேறு யாரோ எடுத்துக் கொள்ள முயல்வது, போன்றது. இராஜதந்திர முறைமைகளுக்கு எதிரானது.

இடையே, தற்போதைய பதற்றமான சூழ்நிலையில், பேச்சுவார்த்தை நடைபெறுமேயானால், அது கைகலப்பிலோ, வன்முறையிலோ முடிந்து விடாமல் இருக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னர் இது போன்ற தனி நபர் முயற்சி கைகலப்பில் முடிந்தது நினைவில் இருக்கலாம். இந்த முறை அதுவே கூட, இரு நாட்டு மீனவர் பிரச்சினையைப் பூதாகரமாக மாற்றி, சர்வதேசத்திற்கு எடுத்துச்செல்லும் வாய்ப்பு உள்ளது. அதனை இங்கு யாரெல்லாம் விரும்புகிறார்கள்? யாரெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்கள்?

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# கடவுள் நம்பிக்கை

கடவுள்!

ஆஹா! என்ன ஒரு அற்புதமான சொல்!

அன்பானவர்களே! கடவுளை நாம் எமது கண்களாலே பார்க்க முடியாதுதான். ஆனால் அவர் நமக்காகச் செய்கின்ற செயல்கள் ஏராளம் என்பதை, நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

கடவுள்தான் இந்தப் பரந்த அழகான உலகத்தை நமக்காகத் தந்திருக்கிறார். அவர்தான் அந்த நீல வானத்தையும் அதிலே சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் நமக்காக உலாவவிட்டிருக்கிறார்.கடவுள் தான் இரவையும் பகலையும் நமக்காக உண்டாக்கியிருக்கிறார்.

கடவுள் தான் அன்பான அம்மாவையும் அப்பாவையும் நமக்காகத் தந்திருக்கிறார்.இதைவிட நமக்கு நல்லது செய்ய யாராலே முடியும்?

அன்பானவர்களே! என்றாவது நாம் இதை எண்ணிப் பார்த்தோமா? கடவுளை, நாங்கள் எங்கள் கண்ணாலே காண முடியாது என்பதற்காக நாம் நினைத்தபடி எல்லாம் எதையும் செய்யமுடியாது.

நம்மோடு இருக்கின்ற கடவுள், நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பதை எமது வாழ்வில் நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

நம் செயல்களுக்கான பலன்தான் நாம் அனுபவிக்கும் நன்மையும் தீமையும் என்பதை முதலில் நாம் நம்பவேண்டும். அதைத்தான் நன்மை அடையும் போது கடவுள் நமக்குத் தருகிறார் என்றும் தீமை வரும் போது கடவுள் நம்மைத் தண்டிக்கிறார் என்றும் சொல்லுகிறோம்.

கடவுளை நம்புங்கள். அவர் ஒருபோதும் உங்களைக் கைவிட மாட்டார்.

துன்பம் வந்தால் மட்டும் நாம் கடவுளை எண்ணக் கூடாது.

காலையும் மாலையும் கடவுளை வணங்குவோம். அவர் எம்மோடு இருக்கிறார் என்று நம்புவோம்.

நாம் அனைவரும் நடக்கிறோம் – இருக்கிறோம் – பாடுகிறோம் – ஆடுகிறோம் – சிரிக்கிறோம் – சிந்திக்கிறோம், இப்படி இயங்கிக்கொண்டுதானே இருக்கிறோம்?

இப்படி நமக்கு எல்லா அவயங்களையும் தந்து நம்மை இயங்க விட்டிருப்பது ஏதோ ஒரு சக்தி என்பதை எண்ணி – அதற்கு நாம் என்றாவது நன்றி சொல்லியிருக்கிறோமா?

அப்படி நாம் நன்றி சொல்ல வேண்டும் என்றால், எல்லா உயிர்களையும் படைத்துக் காக்கும் அந்த இறைவனுக்கே நாம் நன்றி சொல்ல வேண்டும்.அதற்கு நாம் முதலில், கடவுள் இருக்கின்றார் என்று நம்பவேண்டும்.

அன்பானவர்களே! நாம் எமக்குள்ளே கடவுள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வோம். நம் எண்ணங்களை உயர்வானதாக ஆக்கிக் கொள்வோம். ஆரோக்கியம் மிக்கதொரு வாழ்வு வாழ்வோம்.

**- குணரட்ணம் சுதாகரன் -**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**இந்து சமய கலாசார அலுவல்கள்**
**திணைக்களம், நாவலர் மணி மண்டபம், நல்லூர்)**



# கோளறு பதிகம்

**பாடல் - 01**

**வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி**
**சனிபாம்பு இரண்டும் உடனே**
**ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

**பொழிப்பு :**

வனப்பும் திரண்டும் பளபளப்பும் மிகுந்த, பச்சை வண்ண மூங்கில் போன்ற திருத்தோள்களையுடைய, உமாதேவியாரை ஒருபாகமாகத் தன் இடப் பாகத்தில் வைத்தவரும், பாற்கடலைக் கடைந்த போது பாய்ந்து வந்த வித்தை உலகைக் காக்க ›வன உருட்டி எடுத்து உண்டவரும் அம்மை, கழுத்தைப் பிடித்து நிறுத்தியதால், நீலமணி அணிந்த கழுத்தைப் போற் காட்சி தருபவரும், அதனால் நீலகண்டன் என்ற பெயர் பெற்றவரும், மிக அழகிய வீணையில், மிகநல்ல, சுத்தமான சுருதியோடு, சுரங்களை மீட்டுபவரும், குற்றமற்ற சந்திரப் பிறையையும் கங்கையையும் தன் முடிமேல் அமர வைத்து இருப்பவருமான பரமேஸ்வரன், என் உள்ளப் பெருங்கோயிலில் அமர்ந்து இருப்பதனால் சூரியன், சந்திரன், செவ்வாய் என்ற அங்காரகன், புதன், வியாழன் என்கிற குரு, வெள்ளி எனப்படும் சுக்கிரன், சனி என்ற சனிபகவான், பாம்புகள் இரண்டாகிய இராகு, கேது அனைத்தும் பெரிதும் குற்றமற்றன ஆகி நல்லன, நல்லன, அவை மிகுந்த நல்லன, நல்லனவே சிவனடியாராகிய நமக்குச் செய்யும்.

**ஓவியமும் விளக்கமும்: பத்மவாசன்**

# நல்லை கந்தன் கழற்கோர் கவிமாலை



**தானதன தான தன்ன தானதன தான தன்ன**
**தானதன தான தன்ன - தனதான**

**உரிய வாறு உனைவ ணங்க ரவிய தான முகம லர்ந்து**
**உவகை யோடு அருளு வந்து - தருவோனே**
**உருகி வாழு முனது அன்பர் மனது ளாசை தனைவ ழங்கு**
**உயர மாலி னுளவி ரும்பு - மருகோனே**
**துரிய ஞான நிலைய டைந்து விரியு ஞால நிலைய றுந்து**
**திரிவ தான அருளை என்று - பெறுவேனோ?**
**திருவை வாரு பதமி தென்று தெருவு தோறு வருமு னன்பர்**
**செயலை நாளும் புரித லின்றி - திரிவேனை**
**பிரிய மான மயில மர்ந்து உரிய நேர மதைய றிந்து**
**பெருமை சூழ முனமெ ழுந்து - வருவாயோ?**
**பெருகு மாசை வலைவி ழுந்து பிணிக ளோடு உழலு மெந்தன்**
**பிறவி மாள மனமி ரங்கி - யருளாயோ?**
**அரிய பாத மதைநி னைந்து புளக மாகி விழிசு ரந்து**
**அருவி யாக பெருகு மன்பர் - பெருவாழ்வே**
**அருமை யான பதியி தென்று அவனி பேச நிதமு நின்று**
**அருளை வாரி யெறியு நல்லை - பெருமானே!**

**– கவிஞர் இராசையா குகதாசன் –**

# யோக முத்ரா



வாரம் ஓர் ஆசனம்

**செய்(படி)முறைகள்:**

படி 1. பத்மாசனத்தில் அமரவும். வலது மணிக்கட்டை இடது கையால் கொள்ளவும்.

படி 2. மூச்சை வெளிவிட்டபடி முன்புறமாக குனிந்து நெற்றியால் தரையைத் தொடவும். உச்ச நிலை யில் சாதாரணமாக சுவாசிக்கவும்.

படி 3. பின்னர், மூச்சை இழுத்த வாறு நிமிரவும். இவ்வாறு 03 முறைகள் செய்யவும்.

**குறிப்பு :** முழுநிலையில் இரு கைகளிலும் ஆதி முத்திரையை (பெருவிரலை உள்ளே மடித்து அதன் மேல் ஏனைய விரல்களால் மூட வேண்டும்.) பிடித்தவாறு அடிவயிற்றுப்பகுதியில் சேர்த்து வைத்த படியும் செய்யலாம். வயிற்று உபாதைகள் உள்ளவர்கள் இவ் வாசனத்தை தவிர்ப்பது நல்லது.

**பலன்கள்:** அடி வயிற்றிலுள்ள தேவையற்ற அழுக்குகள், கொழுப்புகள் நீங்கி அது சம்பந்தமான நோய்களை குணமாக்கும். வயிற்றுப் பகுதியிலுள்ள சகல உள்ளுறுப்புகள், நரம்பு மண்டலங்களைத் தூண்டுகின் றது. பெண்களுக்கு ஏற்படுகின்ற மாதவிடாய் முதலிய இனப் பெருக்க உறுப்புகளுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளுக்கும் சிறந்த பலனைக் கொடுக்கும். கர்ப்பப்பை, சூலகம், சூலகக் குழாய்கள் பலமடையும். விந்து உற்பத்தி அதிகரிக்கும். மலச்சிக் கல் நீங்கும். இருதய பலவீனம், மார்புச் சளி குணமாகும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

காலைக்கதிர் Kalaikkathir

# ஹற்றன் தொழில் திணைக்களத்துக்கு முன்பாக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!



தொழிலாளர்களின் நலன் கருதி கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் என கோரி பெருந்தோட்ட தொழிலாளர்கள் ஹற்றனில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் ( புதன்கிழமை) இடம்பெற்றது. தொழில் திணைக்களத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் சுமார் 50 இற் கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தொழிலாளர்களின் உரிமை சார் விடயங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கமும், இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனமும், தொழிலாளர்களுடன் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இந்தப் போராட்டத்தின் போது, 'தொழில்திணைக்களமே தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மீறப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்து', 'தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு நிபந்தனைகள் இன்றி வழங்கப்பட வேண்டும்', 'தொழில் அமைச்சரே கூட்டு ஒப்பந்தம் உடனடியாக மீண்டும் கைச்சாத்திடப்பட வேண்டும்' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு கோங்களை எழுப்பி சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். மேலும் தொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் தொழில் ஆணையாளரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் 5 பிரதேச செயலகங்கள் அமைக்க வலியுறுத்திப் போராட்டங்கள்

2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக ஐந்து பிரதேச செயலகங்களை அமைக்குமாறு வலியுறுத்தி நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் ( புதன்கிழமை) கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

'கிராம அபிவிருத்தி மன்றங்களின் ஒன்றியம்' எனும் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் வாழும் மக்களின் நன்மைக்கருதியும், நிர்வாகச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கிலும் புதிதாக 5 பிரதேச செயலகங்களைஅந்தமாவட்டத்தில்அமைப்பதற்கு நல்லாட்சியின்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அப்போது துறைசார் அமைச்சராக இருந்த வஜீர அபேவர்தனவால் இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. எனினும், ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

பிரதேச செயலகங்களுக்கு பதிலாக உப செயலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இதற்கு பல தரப்பினரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே உடனடியாக புதிய பிரதேச செயலகங்களை அமைக்குமாறு போராட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மகஜரொன்றும் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# பெண் ஒருவர் உட்பட அறுவர் விபத்துக்களினால் பரிதாப பலி

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் பெண் ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பன்னல – கிரியுல்ல வீதியின் தலமெஹெர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிரியுல்லயிலிருந்து பன்னல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த பஸ்ஸைக் கடக்கும்போது எதிர்திசையில் வந்த வான் ஒன்றுடன் மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் சந்தலங்காவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர் போபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிரியன்கல்லிய – அதியாகம வீதியில் அக்கரவெல்லிய கறுப்புப் பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 52 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதன்கிழமை பிற்பகல் சைக்கிளுடன் லொறி ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த சைக்கிள் ஓட்டுநர் முந்தலம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் புதுக்குடியிருப்பு பத்துலு ஓயா பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த புதன் காலை நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்றவாகனவிபத்தில்78வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நெடுங்கேணி நகரிலிருந்து புளியங்குளம் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் அதே திசையில் பயணித்த சைக்கிளும் மோதியதில்இந்தவிபத்துஇடம்பெற்றுள்ளது.

அத்துடன் நாரம்மலயிலிருந்து குருநாகல் நோக்கி பயணித்த மோட்டார் வாகனம் ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி ஒருவர் மீது மோதியதில் மஹவிலச்சிய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பெரகல – ஹாலிஎல வீதியில் புதன் மாலை இடம்பெற்ற விபத்தில் 65 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டாரவளையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடந்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதேவேளை, கல்நேவ – தம்புத்தேகம வீதியில் புல்னேவ சந்திக்கு அருகில் கடந்த புதன் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 41வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கணவர் தீயிட்டுக் கொளுத்தியதில் மனைவி பெண் பொலிஸ் மரணம்!

கோனாபீனுவல பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பெண் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் தனது கணவனால் தீயிட்டு எரிக்கப்பட்டதில் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

பலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) உயிரிழந்துள்ளார் என கோனாபீனுவல பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் கோனாபீனுவல வடுகொட பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் முன்னாள்இராணுவஅதிகாரிஆவார், அவர்சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டு மீனவராகப் பணியாற்றி வருகிறார். சந்தேக நபர் தனது மனைவி பணிக்கு சென்றிருந்த நேரத்தில் வேலை முடிந்து வீடு திரும்பியதாகவும், அவர் வீடு திரும்பிய பின்னர் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து சந்தேக நபர் பெண் மீது பெற் றோலை ஊற்றி தீ வைத்துள்ளார். இதனையடுத்து அருகில் இருந்தவர்கள் தீயை அணைத்து அம்புலன்ஸ் சேவைக்கு தகவல் கொடுத்தனர், இதனையடுத்துதீக்காயங்களுக்குஉள்ளானபெண்ணையும், சிறிய காயங்களுடன் இருந்த அவரது கணவரையும் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். சந்தேகநபர் பலபிட்டிய நீதிவான் வைத்தியசாலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் பெப்ரவரி 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# முன்பள்ளி ஆசிரியர்கள் மன்னாரில் கவனவீர்ப்பு!





மன்னார் மற்றும் மடு வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று (புதன்கிழமை) காலை 8.30 தொடக்கம் அடையாள கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நிரந்தர நியமனம் மற்றும் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி மன்னார், நானாட்டான், மடு, முசலி, மாந்தை மேற்கு பகுதிகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போரட்டத்தை முன்னெடுத்தனர்.

25 வருடங்களுக்கு மேலாக முன் பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்ற நிலையில் இதுவரை தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும், முன் பள்ளிகளில் பல தரப்பட்ட கல்வி நடவடிக்கைகளுக்குத் தங்களைப் பயன்படுத்துகின்ற போதும் தங்களுக்கு மாதம் வெறுமனே 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மாத்திரமே வழங்கப்படுகின்றது என முன்பள்ளி ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தங்கள் கோரிக்கைகளை மகஜர்களாகவும் நேரில் சந்தித்து தெரிவித்துள்ள போதும் தங்களுக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் விரைவில் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும், 6 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு தொகை இன்று போதுமானதா? நிரந்தர நியமனம் வேண்டும்,

முன்பள்ளி கல்வி முக்கியம், முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கியம் இல்லையா போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு முன்பள்ளி ஆசிரியர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டதுடன் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இதற்கு முன்னர் ஒருபோதும் ஏற்படாத பொருளாதார நெருக்கடி நிலையொன்று இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. இது குறித்து நாம் கேள்வி கேட்கையில் எந்தப் பதிலும் இதுவரை அரசிடமிருந்து கிடைக்கவில்லை. அரசமைப்பின் 148 ஆம் உறுப்புரைக்கு அமைய பொது நிதி அதிகாரம் முழுமையாக நாடாளுமன்றத்துக்கே உள்ளது. எனவே, நாடாளுமன்றத்துக்கு முழுமையான தகவல்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையேல் அது எமது கடமையில் இருந்து விலகுவதாகிவிடும்.

தற்போது வெளிவிவகாரத்துறை அமைச்சர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்கும் சட்டமூலத்தை சபையில் முன்வைத்துள்ளார். இந்தச் சட்டம் 1979 ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்துவதாகக் கூறியே அரசு கொண்டுவந்ததாக பத்திரிகைகளில் வாசித்தோம். இதுவொரு தற்காலிக சட்டம் எனவும், ஆறுமாத காலத்திற்கே இது நடைமுறையில் இருக்கும் எனவும் கூறினாலும் இன்று வரை 42 ஆண்டுகளாக இந்தச் சட்டத்துடன் வாழ வேண்டியுள்ளது.

சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தல்களுக்கு அமையவும், புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தியதற்கு அமையவுமே இப்போது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்துள்ளார். இதற்கு மறுசீரமைப்பு எனப் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த பத்து நாள்களுக்கு முன்னர் அமைச்சரை நான் யாழ்ப்பாணத்தில் சந்தித்த வேளையிலும், மறுசீரமைப்பு என்ற வார்த்தைக்குப் புதிய அர்த்தம் தேடவேண்டியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன். அதனை அவர் மறுக்கவும் இல்லை.

இந்தத் திருத்தச் சட்டமூலத்தில் புதிதாக எதுவுமே மறுசீரமைக்கப்படவில்லை. இங்கு திருத்தங்கள் எனக் கூறப்பட்டுள்ள சகல விடயங்களும் ஏற்கனவே அவ்வாறே உள்ளன. 18 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட முடியும் என்பதை 12 மாதங்களாகக் குறைக்க நடவடிக்கை எடுத்ததாகக் கூறுகின்றனர். எமக்குத் தெரிய 18 ஆண்டுகளுக்கு மேலாக சிலர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிலரைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளீர்கள். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. கவிஞர் அஹ்னாபும் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால், இந்த விடுதலைகளும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மற்றும் ஏனைய அமைப்புகள் மூலமாக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு இவர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டதன் காரணமாகவே இடம்பெற்றுள்ளன . ஆனால், மேலும் பலர் இவ்வாறு தடுப்பில் உள்ளனர். இருபது, இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளாக உள்ளனர். குறைந்தபட்சம் 300 - 400 பேர் இன்றைய சூழ்நிலையிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. ஒரு சிலரது வழக்குகளே எப்போதும் பிரபல்யமாக பேசப்பட்டுள்ளன. எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க அல்லது முழுமையாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை .

மேலும், தற்போது நீதி அமைச்சர் சில சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்துள்ளார். அதனை வரவேற்கின்றோம். அதேபோல் சட்ட தாமதங்கள் ஏற்படுவதில் சட்டத்தரணிகள் பக்கமும் குறைகள் உள்ளன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் மட்டுமல்ல இந்தப் பொறிமுறையிலும் தவறு உள்ளது. அதனை மாற்றியமைக்க வேண்டும். நாட்டின் சட்டத்துறை, நீதி சுயாதீனமே ஜனநாயகத்தின் அத்திபாரம். இங்கேதான் சாதாரண மக்கள் தமக்கான நியாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அதுமட்டுமல்ல நாட்டின் நீதிமன்ற சுயாதீனத்தில் தலையிடுவதாக இரண்டு அரசியல் தரப்புகளும் ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டுள்ளனர். நாங்கள் நீதிமன்ற சுயாதீனதில் தலையிடவில்லை; நீங்களே தலையிடுகின்றீர்கள் என மாறி மாறி குற்றம் சுமத்திக் கொள்கின்றார்கள். ஆனால், உண்மை என்னவென்றால் இரண்டு தரப்புகளுமே இந்தத் தவறைச் செய்துள்ளீர்கள். இரண்டு தரப்புகளுமே சுயாதீன நீதித்துறையில் தலையிட்டுள்ளீர்கள். இசை நாற்காலி போன்று இரண்டு தரப்பினரும் மாறி மாறி அமர்ந்து நாட்டின் சுயாதீன நீதித்துறையில் அரசியல் தலையீட்டை செய்துள்ளீர்கள் என்பதே உண்மை. ஆகவே, இரண்டுதரப்பினரும் மாறி மாறி ஒருவருக்கு ஒருவர் கூறும் குற்றச்சாட்டுக்கள் உண்மையே. இதுவே நாட்டின் இந்த நிலைமைக்குக் காரணம்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. நீதித்துறையும் அதே நிலைக்கு வந்துள்ள இந்த நேரத்திலாவது நாம் அனைவரும் ஒன்றிணைந்து கட்சி பேதம் மறந்து சரியான மாற்றத்தை உருவாக்குவோம். நாம் இதனைச் செய்யாது போனால் நாட்டு மக்களே அதனைச் செய்வார்கள். இதுவே புரட்சிகளின் வரலாறுகள் – என்றார்.

---

## ஐரோப்பிய நாடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மழுப்புகின்றார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நீதித்துறை சுயாதீனமானது. அதில் யாரும் செல்வாக்குச் செலுத்துவதில்லை என நீதி அமைச்சர் சபையில் தெரிவித்தார். அவர் தெரிவித்த கருத்து உண்மை. ஆனால், 20ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதன் மூலம் நிறைவேற்று அதிகாரிக்கு, நீதித்துறையில் அதிகாரம் செலுத்த முடியுமாகி இருக்கின்றது. மறைமுகவாகவே நிறைவேற்று அதிகாரியின் தலையீடு நீதித்துறையில் ஏற்படுகின்றது. அதனால்தான் 20ஆவது திருத்தச் சட்டத்தை அனைவரும் எதிர்க்கின்றனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக சர்வதேச நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பேசி வருகின்றனர். முக்கியமான சரத்துக்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தப்படவில்லை என அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்ட திருத்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தச் சட்டமூலத்தை சபைக்குச் சமர்ப்பித்திருந்தார். இதன்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கேட்டுக்கொண்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் கேட்டபோது அவர் மழுப்பும் வகையில் பதிலளித்தார். அதனால் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்போகின்றன என்பதைப் பார்ப்போம்.

அத்துடன் மனித உரிமைவாதி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்திருந்த கருத்தை இலக்குவைத்து வெளிவிவகார அமைச்சு அவருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருக்கின்றது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிகவும் மோசமான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் 22 மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார். ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்குப் பிணை வழங்கி தீர்ப்பளித்த நீதிபதி நீல் இத்தவல, தனது தீர்ப்பில் தெரிவித்திருக்கும் விடயங்களை அனைவரும் வாசிக்கவேண்டும். குறிப்பாக அவரது தீர்ப்பில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தற்காலிகமாகவே அறிமுகப்படுத்தப்பட்டதாகும். விடுதலைப்புலிகளை அடக்குவதற்கே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், இன்று அது அரசியல் பழிவாங்கல் போன்ற மோசமானமுறையில் பயன்படுத்தப்படுகின்றது என அவர் தெரிவித்திருக்கின்றார். நீதியரசர் நீல் இத்தவல இந்த நாடாளுமன்றத்தில் சேவை செய்த சிறந்த அதிகாரியாவார்.

அதேபோன்று முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி பயங்ரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார். ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தைப் பயன்படுத்தி அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. ஆனால், இந்த வழக்கு எவ்வாறு தொடுக்கப்பட்டது என்பதை வழக்கு விசாரணைகளில் கண்டறியப்பட்டு, அவர் மீது எந்தக் குற்றமும் இல்லை எனத் தெரிவித்து நீதிமன்றம் அவரை விடுவித்திருந்தது.

மேலும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தை அவமதித்த சில வார்த்தைகளுக்காக அவருக்குப் பாரிய தண்டை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டத்திலும் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால் ஐ.சி.சி.பி.ஆர். மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் நடைமுறைக்கு ஏற்றவகையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

---

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாம் காணவில்லை. இதன்மூலம் சர்வதேசத்தை ஏமாற்றி விட முடியும் என்று நினைக்காமல் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களை முன்னிறுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதே காலத்தின் தேவை.

– இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத் தங்களை மேற்கொள்வதற்கான சட்டமூலம், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது உரையாற்றிய ரிஷாத் எம்.பி மேலும் கூறியதாவது:–

இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பான திருத்தத்தை நான் வாசித்துப் பார்த்தேன். அதில் எந்தவொரு பெரிய மாற்றத்தையும் நான் காணவில்லை. ஒரே ஒரு விடயத்தில் மாத்திரம்தான் அதாவது, சந்தேகநபர் ஒருவரை மூன்று மாத காலம் என்ற அடிப்படையில், 18 மாத காலம் தடுத்து வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை 12 மாதங்களாகக் குறைத்துள்ளனர். இது மாத்திரம்தான் நாம் இங்கே காண்கின்ற மாற்றமாகும்.

ஆனால், அதன் பின்னர், பிரிவு 7 இன் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவர்களாக இருந்தால், வழக்கு முடியும்வரை அவர்களை சிறையில் வைக்க முடியும். எந்தவொரு நீதிமன்றத்துக்கும் அதன் பிறகு பிணை வழங்கும் அதிகாரம் கிடையாது. அவ்வாறான பாணியிலே தான் இந்தத் திருத்தம் இருக்கின்றது.

எனவே, சுமார் 18 அல்லது 20 வருடங்களாக தமிழ் இளைஞர்கள் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் வாடுகின்றனர். அவர்கள் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் அல்லது வழக்கு முடியாமல் சிறையிலே வாடுகின்றனர்.

நான் சிறையில் இருந்தபோது இதனைக் கண்ணால் கண்டேன். ஆயுதம் ஏந்திய போராளிகள் பலர் மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் சமூகவலைத் தளங்களில் சில விடயங்களைப் பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மீண்டும் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, வருடக் கணக்கில் சிறையில் உள்ளனர். அவ்வாறனவர்களுக்கு இந்த திருத்தச் சட்டத்தில் எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

சஹ்றான் என்ற நயவஞ்சகன் செய்த பாதகச் செயலால், முழு முஸ்லிம் சமூகமும் தலைகுனிந்து நிற்கின்றது. பொருளாதாரரீதியிலும் பல்வேறுபட்ட விவகாரங்களிலும் ஏகப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

இருபது வருடங்களுக்கு மேலாக நாடா ளுமன்றத்தைத் தொடர்ச்சியாக பிரதிநிதித்துவம் செய்யும் என்னையும், எந்தவிதமான காரணமும் இன்றி பல மாத காலம் சிறையில் அடைத்தனர். குண்டுத் தாக்குதலைக் காரணமாக வைத்து இந்த நடவடிக்கையை எடுத்தனர். எனவே, இந்தச் சட்டத்துக்கு எல்லோருமே பலியாகி வருகின்றனர். பாதுகாப்பு அமைச்சர் நினைத்தால் கையொப்பத்தை இட்டு, சந்தேகம் என்று சிறையில் வைக்க முடியும் என்ற இந்தச் சட்டம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு.

அத்துடன், ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற செயலணிக்காக நியமிக்கப்பட்டுள்ள தலைவரைத் தயவு செய்து மாற்றுங்கள். அவரை வைத்து எதிர்காலத்தில் அரசியல் செய்யலாம் என நீங்கள் நினைத்தால் அது ஒரு பெரிய ஆபத்தை உருவாக்கும். அத்துடன், சிறுபான்மையை அச்சப்படுத்துவதற்காகவும், பெரும்பான்மையைச் சந்தோசப்படுத்துவதற்காகவும் இவ்வாறான மோசமான கைங்கரியங்களைச் செய்ய வேண்டாம் எனக் கோருகின்றேன்.

மேலும், ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற செயலணி நாட்டுக்கு அவசியம் என நீங்கள் கருதினால், நல்லதொரு தலைவரை நியமித்து, எல்லா இனங்களையும் பாரபட்சமின்றி நடத்துவதற்கான செயன்முறைகளை மேற்கொள்ளுங்கள். அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம் – என்றார்.

---

## திஸ்ஸ விதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திஸ்ஸ விதாரண தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுக் கூடிய அரச கணக்குகள் பற்றிய குழுவில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பெயரை முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அஸோக அபேசிங்ஹ வழிமொழிந்தார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார்.

நாடாளுமன்றத்தின் 119 (1) நிலையியல் கட்டளைக்கு அமைய இந்தக் குழுவுக்கான உறுப்பினர்கள் அண்மையில் தெரிவுக்குழுவால் நியமிக்கப்பட்டனர். இதன்படி அமைச்சர் உதய கம்மன்பில, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவண்ண, வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ஹெஷான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ஹரின் பெர்னாண்டோ, நிரோஷன் பெரேரா, அஸோக அபேசிங்ஹ, புத்திக பத்திரண, கே. காதர் மஸ்தான், மொஹமட் முஸம்மில், சிவஞானம் சிறிதரன், ஹேஷா விதானகே, வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி, பீ.வை.ஜீ. ரத்னசேக்கர, வீரசுமன வீரசிங்ஹ, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர்.

அரச செலவுகளை எதிர்நோக்குவதற்காக நாடாளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தனக்கெனக் கருதும் நாடாளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது அரச கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாகும்.

நேற்றைய கூட்டத்தில் அரச கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களான இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர, ஹெஷான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோன் பெரேரா, அஸோக அபேசிங்ஹ, மொஹமட் முஸம்மில், சிவஞானம் சிறிதரன், வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி, பீ.வை.ஜீ. ரத்னசேக்கர, வீரசுமன வீரசிங்ஹ, பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -


அங்கம் - 277

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**703.முதல் தெரிவு செய்யப்பட்ட மத்திய குழு தொடர்ந்து இயங்கியதா?**

அந்த மத்திய குழுவில் பிரபாகரனுக்கு ஆதரவாக இருந்தவர்களும் அவரோடு இருந்த அங்கத்தினர்களும் இன்னுமொரு குழு ஒன்று அமைப்பதற்கான முடிவுக்கு வருமாறு பிரபாகரனை வற்புறுத்தினர். ஆனால் தான் வரித்துக் கொண்ட இராணுவ அரசியலுக்கு இது எதிரானது என்ற கருத்தில் பிரபாகரன் உறுதியாக இருந்து, மத்திய குழு அமைக்க விரும்பியவர்களுடனும் முரண்பட்டு, இறுதியில் பிரபாகரன் விடுதலைப் புலிகளில் அந்த சமயம் ஆளுமைமிக்கவர்களாக இருந்த அன்டன். மனோ மாஸ்டர், தணி, ராகவன் போன்றோரிடம் எஞ்சியிருந்த பணம், ஆயுதங்கள் மட்டுமல்லாது என்றுமே அடிபாட்டுக்கு இலக்காகியிருந்த 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரையும் கூடத் தான் அதற்கு இனிமேல் உரிமை கோர மாட்டேன் என்று உறுதியளித்து விட்டுச் சென்று, தங்கத்துரையையும் குட்டிமணியையும் சந்திக்கிறார்.

பிரபாகரனின் அர்ப்பணிப்புக்களால்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் நிறுவப்பட்டது என்பதாலும், அதனைத் தீரத்துடன் பலமாக உருவாக்கியவர் அவரே என்பதாலும், தங்கதுரைக்கும் குட்டிமணிக்கும் அவரிடம் அனுதாபம் இருந்தது. இயக்கத்தில் நடந்தவை பற்றி ஆறுதல் சொல்லித் தேற்றினார்கள். அவரைத் தங்களுடன் இணைந்து செயல்படக் கேட்க பிரபாகரனும் ரெலோ இயக்கத்தில் அவர்களுடன் இணைந்தார். தான் வளர்த்த இயக்கத்திலிருந்து யாரும் அவருடன் இல்லாமல் இருந்தாலும், ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்ற உறுதி மட்டும் இருந்தால் போராடுவதற்காகவே குட்டிமணி, தங்கதுரையுடன் சேர்ந்தார். தன்னுடைய இயக்கத்திலிருந்து அனைவராலும் நிராகரிக்கப்பட்டு, தனிமையைத் திரும்பவும் அடைந்தமை அவரது நம்பிக்கை உணர்வுகளைப் பலமாகப் பாதித்தது. குட்டிமணி, தங்கதுரையின் ஆதரவோடு, அவர்களது பரந்த வல்வெட்டித்துறை தொடர்புகளைப் பாவித்து, விடுதலை இயக்கத்தை வளர்த்துவிடலாம் என்று நம்பினார். அதனைப்பிரபாகரன் சிலநாள்களிலேயே தன் பழைய சகாக்களைத் தனித்தனியாக சந்தித்து, அவர்களுக்கு இராணுவ நடவடிக்கைதான் ஒரேவழி என்று விளக்கி, ஒவ்வொருவராக ரெலோ அமைப்போடு இணைக்கிறார். குட்டிமணிக்கும் தங்கதுரைக்கும் இருந்த வல்வெட்டித்துறை வியாபாரத் தொடர்புகள் ஆயுதங்கள் வாங்க, இறக்குமதி செய்து தரக்கூடிய அனுகூலங்கள் பற்றியும் பேசி அவர்களோடு சேர்ந்து இயங்குவதன் நன்மைகளில் நம்பிக்கையூட்டப்பட்டது.



பிரபா

விடுதலைக் குழுக்கள் தங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும் மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடியதான தாக்குதல்களிலும் செயற்பட்டார்கள்.

குட்டிமணியும் தங்கதுரையும் தங்களது வியாபாரத்தைக் குறைத்து, மேலும் அங்கத்தினர்கள் வந்து சேர்ந்ததனால் விடுதலைப் போராட்டத்திற்கு முழு நேரம் செலுத்த தீர்மானித்துக் கொள்ளைகள் நடத்தி பணம் சேர்க்க முடிவு செய்தார்கள்.

இதற்காக முதலில் பிரபாகரன், குட்டிமணி ஜனவரி 1981 இல் குரும்பசிட்டியில் தனிப்பட்டவர் நடத்திய நகை அடைவு பிடிக்கும் நிலையமொன்றைக் கொள்ளையிட்டனர். அதனைத் தொடர்ந்து பெரியதாக நீர்வேலி வங்கிக் கொள்ளை மார்ச் 1981 இல் நடத்தப்பட்டது. அதிலும் பிரபாகரன் பங்கெடுத்திருந்தார். அதில் பெறப்பட்ட பணம் எட்டு மில்லியனுக்கு கிட்ட. அந்த நாள்களில் அது பெரும் தொகை. பாதுகாப்புப் படையினரையும் அது அதிர்ச்சிக்குள்ளாக்கியது.



உமா

இந்தக் கொள்ளைகளினால் பாதுகாப்புப் படையினரின் தேடுதல்கள் அதிகரிக்க, குட்டிமணியும் தங்கதுரையும் சிறிது காலம் இந்தியாவில் மறைந்திருக்க தீர்மானித்து ஏற்பாடுகளின்படி படகுக்காக கடற்கரையில் காத்திருந்த போது 5 ஏப்பிரல் 1981 ஆம் ஆண்டு இருவரும் தேவனுடன் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் கைதுக்கு காரணமாயிருந்த தகவல்கள் பற்றி சர்ச்சைகள் உண்டு. அவற்றைத் தவிர்ப்போம்.

ரெலோவில் சிறீசபாரத்தினம் ஆளுமை மிக்கவராக பிரபாகரனோடு சேர்ந்து இயங்கினாராயினும் பிரபாகரனது போக்குகளால் முரண்பாடுகள் இருந்தன. அவற்றுக்குப் பிரபாகரன் தன்னிச்சையாக சில பழிவாங்கல்களை மேற்கொண்டமைதான் காரணமாக இருந்தது. இவை விடுதலை இயக்கங்களிடையே மேலும் பகைமைகளை வளர்த்தன.

**704.எவற்றைக் குறிப்பிடுகிறீர்கள்?**

ஜனவரி 1982 இல் நானும் கந்தசாமியும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் (TRRO) பற்றிய பணிகளில் யாழ்ப்பாணம் வந்து, நான் எனது மனைவியின் வீட்டில் உடுவிலில் தங்கியிருந்தேன். நாங்கள் வந்து சேர்ந்த இரண்டு நாள்களில் புளொட் இயக்கத்தின் சுந்தரம் யாழ்ப்பாணத்திலுள்ள சித்திரா அச்சகத்தில் வைத்து கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலை பிரபாகரனினால்தான் செய்யப்பட்டது என எங்களுக்கு வந்த உடனடித் தகவல்கள் தெரிவித்தன. ரெலோவில் தெரிந்திருந்த சில உறுப்பினர்களிடம் இதனை ஏன் ரெலோ இயக்கம் செய்து பகை வளர்க்கிறீர்கள் எனக் கேட்ட போது, அவர்கள் தாங்கள் செய்யவில்லை, தங்களுடன் பேசி எதுவித முடிவும் எடுக்கப்படாமல் இது தன்னிச்சையாக அவர்களிடையே இருந்த பழைய பகைமையால் செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்கள்.

இந்த விசாரணைகளிலும் புத்திமதி தருவதிலும் ஈடுபட்டிருக்க, அடுத்தநாள் காலை 8 மணிபோல் கண்ணன் வீட்டிற்கு வந்து உமாமகேஸ்வரன் என்னையும் கந்தசாமியையும் அன்றே சந்திக்க விரும்புகிறார், பாதுகாப்புக் கருதி உமா யாழ்ப்பாணம் வர முடியாது, எனது வீட்டிலேயே ஒழுங்கு படுத்துகிறோம், கந்தசாமியை நீங்கள் அழைத்து வாருங்கள், மதியநேரம் உமாவுக்கு வர வசதியாயிருக்கும் எனக் கூறினார். கண்ணனை புளொட் அங்கத்தினராகவும் உமாவின் விசுவாசியாகவும் அறிந்திருந்தேன்.

குறிப்பிட்ட நேரத்தில் உமா வந்தார். கண்ணனும் அவரது சில தோழர்களும் வீட்டின் முன் பின் பக்கங்கள் என்று பாதுகாப்பில் இருந்தார்கள். உமாவின் முகத்திலும் கண்களிலும் கோபத்தின் வெறி தாண்டவமாடியது. அவர் நாட்டுக்குத் திரும்பியிருந்தார் என அறிந்திருந்தோம். ஆனால் அன்று வரை சந்தித்துப் பேசவில்லை.

உமா நான் இங்கு விவரித்த சம்பவங்களைத் திரும்ப மேலோட்டமாக விளங்கப்படுத்தி, சுந்தரம் குழு அவரும் (பிரபாகரனும்) சேர்ந்து ஜனநாயக வழியில் திட்டங்களும் தீர்மானங்களும் எடுப்பதற்காக மத்தியகுழு, செயற்குழு என அமைத்தும், அதில் அவரை ஆதரித்தோர் பெரும்பான்மையினராக இருந்தும், அவற்றைச் செயல்படுத்த பிரபாகரன் விரும்பவில்லை, இப்படியான தனிப்பட்ட கொலைகளையும் பழிவாங்கல்களையும் தன்னை எதிர்ப்பவர்களுக்கு எதிராக நடத்துவது நியாயம், ஆனால் தன்னை யாரும் அவை பற்றி எதிர்க்கேள்வி கேட்க முடியாது என நடக்கிறார், இவரை இப்பொழுதே கிள்ளி எறியா விட்டால் அது தமிழ் மக்களது போராட்டத்தையே மலினப்படுத்திப் பாதிக்கும். தன்னை சுந்தரம் குழுவிலிருக்கும் அவரது பழைய தோழர்கள் முடிப்பதற்குள் அவர்களை முடிக்கப் பிரபாகரன் திட்டம் தீட்டியிருப்பார் என்பதால் சுந்தரத்தின் தோழர்கள் மேலும் பார்த்திருக்க முடியாது என்று தன்னைக் கண்டிமைப் படுத்துகின்றனர், அதனால் தான் அவர்களுக்கு பிரபாகரனையும் அவரது சில தோழர்களையும் அழிப்பதற்கு உத்தரவு தரப்போகிறேன் என்றார்.



மனோ மாஸ்டர்

தங்களது மத்திய குழுவால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது, மத்தியஸ்தத்துக்காகவும் மரியாதைக்காகவும் இதனைச் சொல்லிப் போக வந்தேன் என்று முடித்தார் அவர்.

உமாவின் கணக்குப்படி ரெலோவில் இருந்தாலும், இந்த கொலையைப் பிரபாகரன் தனித்துச் செய்தமையால் அவரோடு விடுதலைப் புலிகளில் இருந்தவர்கள் ஆக 15 முதல் 20 பேர் மட்டுமே. தாங்கள் அவர்களுக்கு எதிராக இயங்கும் போது ரெலோ அதில் ஈடுபடாது என நம்பினார்.

இவைஎல்லாம்விடுதலைப்போராட்டத்தைப் பலப்படுத்தாது, 50 முதல் 60 பேர் இயங்கிக் கொண்டிருந்தபோது இப்படி ஒவ்வொன்றாக அல்லது 15 – 20 பேரையே பழிவாங்குவது எவ்வளவு முட்டாள்தனம்எனநீண்டநேரம்கெஞ்சாத குறையாக விளக்கி சில நாள்கள் பிரபாகரனுடன் பேசுவதற்காகத் தவணை கேட்டோம். தோழர்கள் பிரபாகரனை முடித்து விட வேண்டும் என்றே நிற்பதால் மூன்று நாள்களுக்கு மேல் விட முடியாது என்றும், இடையில் பிரபாகரன் யாரையும் தாக்கினால் உடனடி எதிர்த்தாக்குதல் செய்வார்கள் என்றும் சொல்லித் தான் எங்களைச் சந்தித்த விடயத்தை ரெலோ தரப்புக்கும் அறிவிப்பேன் எனக் கூறி விடைபெற்றார்.

(வளரும்)



குட்டிமணி, தங்கத்துரை, தேவன் கைதான போது....

# டெங்கு அபாய வலயத்தில் யாழ்ப்பாணம் மாவட்டமும்!

தீவிரமான டெங்கு காய்ச்சல் அபாயம் உள்ள மாவட்டங்களின் பட்டியலில் யாழ்.மாவட்டமும் அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. என யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஊடகங்களுக்கு மேலும் அவர் கூறியுள்ளவை வருமாறு –

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சமகாலத்தில் டெங்கு காய்ச்சல் அதிகமாகவே காணப்படுகின்றது.

எனவே, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம உத்தியோகத்தர்கள், ஏனையோருடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து செயற்படுமாறு கேட்டுள்ளோம்.

எமது மாவட்டத்தில் மலேரியா அபாயம் இருந்த போதும் தற்போது அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொது மக்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். – என்றார்.

இதேவேளை நாடு முழுவதும் 6 மாவட்டங்கள் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் யாழ்.மாவட்டமும் அடங்கியுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பான சுற்றுலாத் தளமாக நாட்டை மாற்றுவதற்குத் திட்டம்!

இலங்கையை பாதுகாப்பான திருமண சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நிகழ்வு மேலாண்மை, ஆடை வடிவமைப்பு மற்றும் பிற துணைத் துறைகளையும் மேம்படுத்த உதவும் என அந்த சபையின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலாத்துறை 'திருமண சுற்றுலா'விற்கும் புதிய உத்வேகத்தை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். நிகழ்வு முகாமைத்துவ நிறுவனங்கள், திருமணத்தை திட்டமிடுபவர்கள், புகைப்படக் கலைஞர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள் மற்றும் ஏனையவர்களை ஒரே மேடையின் கீழ் பட்டியலிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'ஆசியா வழங்கும் அனைத்தும் இலங்கைதான்' பெப்ரவரி 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடைபெறும் 2022 திருமண வாரத்தை அறிவிப்பதற்காக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயம் தொடர்பாகக் குறிப்பிட்டார். இலங்கை திருமணப் பிரிவில் அபரிமிதமான ஆற்றலைக் கொண்டுள்ளது என்றும் அவர் இதன்போது கூறினார்.

திருமண சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இந்தியா, மாலைதீவு மற்றும் பாகிஸ்தான் போன்ற பிராந்திய நாடுகளுடன் இலங்கை உறவுகளை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும் அதேவேளையில், ஐரோப்பா, ஆசியா மற்றும் பல சந்தைகளில் திருமண தளமாக இலங்கை ஏற்கனவே பெயர் பெற்றுள்ளன எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

# சுகாதாரத் தொழிற்சங்கப் பணிப்புறக்கணிப்பு பின்னணியில் அரசியல் உள்நோக்கமுள்ளது

## சுகாதார அமைச்சு குற்றச்சாட்டு

சுகாதாரப் பணியாளர்கள் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தின் பின்னணியில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சு, மேற்படி போராட்டத்துக்கு வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துவெளியிட்ட வைத்திய சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் விஜேசூரிய, நாட்டில் கொரோனா நிலைமை மோசமாகி வரும் இந்த சூழ்நிலையில், பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றமை உண்மையில் நியாயமற்றது எனத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கை போராடிக் கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில் அவர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாது என்றும் எவ்வாறாயினும் தாங்கள் விவாதங்களுக்குத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

# ரிக் – ரொக் போன்ற சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த நாட்டில் சட்டங்கள் வேண்டும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்து

பாரிய கலாசார, சமூக மற்றும் தேசிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் ரிக் – ரொக் போன்ற சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்தியுள்ளார். இந்த விடயத்தில் உடனடி கவனம் செலுத்தி சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டிய தருணம் இது எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சமூக ஊடகங்களை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் என்று தான் வாதிடவில்லை என்றும் ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் பொறிமுறையே காலத்தின் தேவை என்றும் அவர் கூறினார்.

# தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தலைவரும் பதவியை இராஜினாமா!

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவியை கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க இராஜினாமா செய்துள்ளார்.

ராகம மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு பின்னர், ஜனாதிபதி அலுவலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில், இராஜினாமா கடிதத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் அவர் கையளித்துள்ளார்.

# தென்கொரியாவிற்கு பயணமானார் மைத்திரி!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தென்கொரியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

அவர் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை 12.45 மணியளவில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானமான எஸ்கியூ–468 இல் சிங்கப்பூர் வழி யாக தென் கொரியா நோக்கி அவர் பயணித்தார்.

தென்கொரியாவில் நடைபெறவுள்ள உலக சமாதான உச்சிமாநாட்டில் சிறப்புரையாற்றுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றே அவர் அங்கு சென்றுள்ளார்.

அவருடன் மேற்படி விஜயத்தில் மேலும் இருவர் இணைந்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிநாடு செல்வோருக்கு பி.சி.ஆர் யாழ். போதனாவில் இடைநிறுத்தம்!

வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை யாழ். போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மவட்ட சுகாதார நிலமைகள் தொடர்பகா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை வைத்தியசாலையில் மேற்கொள்வதில் சிக்கல் காணப்படுவதால் மறு அறிவித்தல் வரை அவை இடைநிறுத்தப்படுகின்றன. – என்றார்.

# மீண்டும் கொவிட் கட்டுப்பாடு இன்று இறுதிமுடிவு அறிவிப்பு!

*இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும்நிலையில் புதிய கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமா? என்பது தொடர்பாக அரசாங்கம் தீர்மானிக்கவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*இதற்காக சுகாதார அமைச்சரின் தலைமையில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை முக்கிய கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*அந்தக் கூட்டத்தின் நிறைவில் முக்கிய தீர்மானங்கள் தொடர்பான அறிவிப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

# மூட நம்பிக்கையினால் பறிபோன சிறுவன் உயிர்

படல்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆதிமுல்ல பிரதேசத்தில் வீடொன்றின் அறையொன்றில் 10 வயது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியமை தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து குறித்த வீட்டை சோதனையிட்டனர் எனபொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 7ஆம் திகதி சிறுவனின் தொண்டையில் சளி சிக்கியதால் சுகவீனமுற்றுள்ளான் எனவும், நோய் குணமடைவதற்காக பெற்றோர்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மத வழிபாடுகளின் போது சிறுவன் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

பின்னர் சிறுவனின் உயிர் மீட்கப்பட வேண்டும் என்று பெற்றோர்கள் தொடர்ந்து பிரார்த்தனை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச்சம்பவம் தொடர்பில் வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகியோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் அறிவிக்கப்படவுள்ளதுடன் பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்படவுள்ளது. படல்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டுக்காவலில் கைதிகளை வைப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் யோசனை

சிறிய குற்றங்களுக்காக கைதிகளை சிறையில் அடைக்காமல் வீட்டுக்காவலில் வைக்கும் முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் கவனம் செலுத்தி வருகிறது.

சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைப்பதும், அவர்களுக்காக அரசாங்கம் செலவிடும் பெரும் தொகையைச் சேமிப்பதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஏற்பாட்டின் கீழ், வீட்டுக் காவலில் உள்ளவர்கள் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக மட்டுமே வீட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

வேலை வாய்ப்புகள் மற்றும் சுகாதாரத் தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய விடயங்களுக்கு மட்டுமே தங்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

அவர்களின் பயணம் உள்ளிட்ட நடவடிக்கைகள் சிறை அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு, வீட்டுக் காவலில் உள்ளவர்களின் உடலில் எங்காவது ஒரு மின்னணு சாதனம் பொருத்தப்பட்டு, அத்தகைய கண்காணிப்பை எளிதாக்குகிறது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டு சீர்திருத்த வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுக் காவலில் வைக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, நீதியமைச்சர் அலி சப்ரியிடம் இந்த திட்ட முன்மொழிவை கையளித்தார் எனச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிக்கு தீர்வாக சில நாடுகள் இம்முறையை நடைமுறைப்படுத்தி வருகின்றன எனப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.02.2022இல் வெளியிடப்பெற்றது.

# ஏலம் விட வேண்டிய ஒன்பது படகுகள் மன்னாரில் மாயம்!

## வெறுங்கையுடன் திரும்பினர் அதிகாரிகள்

(ந.லோகதயாளன்)

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 11**

**அத்துமீறிய இந்திய மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மன்னாரில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறிவிக்கப்பட்ட 9 படகுகள் திடீரென மாயமாக மறைந்து விட்டன. அவற்றை ஏலம் விடுவதற்காக நேற்று அங்கு சென்ற நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் படகுகளைக் காணாது அதிர்ச்சியுடன் திரும்பிய சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**

மன்னார் மாவட்ட கடற்பரப்பிற்குள் 2014ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு காலத்தில் ஊடுருவிய தமிழக மீனவர்களின் 9 படகுகள் மன்னாரிலும், 6 படகுகள் தலைமன்னார் கடற்படைத் தளத்திலும் தரித்து நிறுத்தப்பட்டிருக்கின் றன என அறிக்கையிடப்பட்டது. இவ்வாறு நிற்கும் படகுகளில் மன்னார் மாவட்டத் தில் 9 படகு ஏலம் விடப்படும் எனவும் பத்திரிகையில் பகிரங்க விளம்பரம் பிர சுரிக்கப் பட்டது.

இதற்கமைய நேற்றைய தினம் படகு களை ஏலம் விடுவதற்காக நீரியல்வளத் திணைக்களம் மற்றும் அமைச்சுகளின் அதிகாரிகள் குழு மன்னார் முழுவதும் தேடியபோதும் அங்கே ஒரு படகு கூட அப் படிக் காணப்படவில்லை. இதன் போது செய்தியாளர்களும் பிரசன்னமாகியிருந் தமையால் அதிகாரிகள் வாயடைத்து நின்றனர்.

இதனால் கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள், திணைக்கள உத்தியோ கத்தர் இடையே கடும் வாக்குவாதம் இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

தலைமன்னார், பியர் இறங்குதுறை யில் நேற்று மதியம் இந்திய மீனவர்களின் படகுகள் ஏல விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலை யில், ஏல விற்பனையில் கலந்து கொண்டு படகுகளைக் கொள்வனவு செய்ய மன் னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள் ளடங்களாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 30 இற்கும் மேற்பட்ட கொள்வனவாளர்கள் தலை மன்னார் - பியர் இறங்குதுறைப் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

எனினும், அறிவிக்கப்பட்டது போன்று ஏல விற்பனை இடம்பெறவில்லை என வருகை தந்த கொள்வனவாளர்கள் தெரி வித்தனர்.

நேற்று காலை முதல் மதியம் வரை ஏல விற்பனைக்காகக் காத்திருந்த போதும் இறுதி நேரத்திலேயே குறித்த ஏல விற்பனை இடம்பெறாது என ஏற் பாட்டா ளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், தூர இடங்களில் இருந்து வருகை தந்த கொள்வனவா ளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென் றனர்.

# யாழ். நகரில் நடமாடும் கஞ்சா வியாபாரி கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகரில் நடமாடிய கஞ்சாப் பொதி களை விற்பனை செய்த நபரைப் பொலி ஸார் கைதுசெய்தமையுடன்.

கஞ்சாவை சிறிய சிறிய பொதிகளாகப் பொதி செய்து நபர் ஒருவர் யாழ். நகரில் நட மாடி விற்பனை செய்து வருகின்றார் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவி னருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை யடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங் கப்பட்டது.

அதனடிப்படையில் பொலிஸார் சந் தேக நபரைக் கைதுசெய்ததுடன், கஞ்சா வைக் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

# ஒமிக்ரோன் அல்லாத புதிய ரகம் வைரஸ் தொற்று பரவும் ஆபத்து?

புதிய உருமாறிய கொரோனா தொற் றுப் பரவ வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, அதன் பாதிப்பு இதுவரை இல்லாத வகையில் அதிகமாக இருக்கும் என்றும் எச்சரித்துள்ளது.

அந்த அமைப்பின் கொரோனா தொழில்நுட் பப் பிரிவு தலைவா மரியா கிர்கோவ் கூறுகையில் - 'தற்போதுள்ள ஒமிக்ரோன்தான் கடைசி கொரோனா வகையாக இருக்காது.

மேலும் நான்கு உருமாறிய கொரோனா தொற்று தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. அவ்வப்போது இவை உரு மாற்றம் அடைவதால் இதுகுறித்த முழு மையாக உறுதி செய்ய முடியவில்லை.

இந்தப் புதிய உருமாற்றம் அடைந்த கொரோனாவால் இதுவரை கொரோனா வகைகளில் இல்லாத அளவுக்கு பரவல் வேகமும், பாதிப்பும் அதிகமாக இருக் கும்.

ஆகையால், கொரோனா தடுப்பூசி செலுத்தலை துரிதப்படுத்தி, அந்தப் புதிய வகையின் பரவல் வேகத்தைக் குறைக்க வேண்டும். - என்றார்.

# எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு மண்கவ்வும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆரூடம்

எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு படுதோல்வியடைவது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்து வதில் ஏற்பட்டுள்ள சட்டச் சிக்கல் நிலை காரணமாக விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீலித்து வருகின்றது என வெளி யாகியுள்ள செய்தி குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட் சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

எந்தத் தேர்தலையும் எந்த வேளை யிலும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், ராஜபக்ஷ அர சுக்குத் தேர்தலை எதிர்கொள்ளும் திராணி இல்லை. அதனால் தான் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ஓராண் டுக்கு இந்த அரசு நீடித்தது. இப்போது விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர் தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீ லித்து வருகின்றது என வெளியாகியுள்ள செய்தி வேடிக்கையாகவுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்து வதில் எந்தச் சட்டச் சிக்கலும் வராது. ஏனெனில், தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறை வேற்றிவிட்டு மாகாண சபைத் தேர்தலை இந்த அரசு நடத்த முடியும். தோல்விப் பயம் காரணமாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்த இந்த அரசு பின்னடிக் கின்றது. தேர்தல் பயம் கார ணமாகவே உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத் தையும் இந்த அரசு ஓராண்டுக்கு நீடித் தது - என்றார்.

இதேவேளை, முடிந்தால் எதிர்க் கட் சியை இனிவரும் தேர்தலில் வென்று காட்டுமாறு சவால் விடுக்கின்றேன் என்று



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் ஏற்பாடு செய் யப்பட்டுள்ள பொதுப் பேரணிகளின் 'முத லாவது பொதுஜன பேரணி' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரி வித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதுளை அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்தியர்கள் குழுவுக்கும் தொற்று

பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள வைத்தி யர்கள் குழு வொன்று கொவிட் தொற் றுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இதன் காரணமாக சிகிச்சை நடவடிக் கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத் தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொவிட் நோய்த்தொற்றின் அறிகுறிகள் வெளிக்காட்டப்படாதமையால் கொவிட் வைரஸ் பரவுவது மேலும் துரிதப்படுத் தப்படுவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

# கோப் குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பற்றிய குழுவில் அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகர பேராசிரியர் சரித ஹேரத்தின் பெயரை முன்மொழிந்ததுடன், நாடாளு மன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த இதனை வழிமொழிந்தார்.

பேராசிரியர் சரித ஹேரத் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் தலைவராகக் கடமை யாற்றியிருந்தார்.

நாடாளுமன்றத்தின் 120 (1) நிலை யியல் கட்டளைக்கு அமைய இந்தக் குழு வுக்கான உறுப்பினர்கள் அண்மையில் தெரிவுக்குழுவால் நியமிக்கப்பட்டனர்.

இதன்படி, அமைச்சர்களான மஹிந்த அமரவீர, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, கலாநிதி சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர் களான ஜயந்த சமரவீர, டி.வீ. சானக, இந் திக அனுருத்த ஹேரத், கலாநிதி நாலக கொடஹேவா, நாடாளுமன்ற உறுப்பினர் களான ரவூப் ஹக்கீம், கலாநிதி சுசில் பிரேமஜயந்த, அநுரகுமார திஸாநாயக்க, பாட்டலி சம்பிக ரணவக்க, ஜகத் புஷ்ப குமார, கலாநிதி ஹர் டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, நலீன் பண்டார ஜயமஹ, எஸ்.எம். மரிக்கார், பிரேம்நாத் சி. தொல வத்த, சாணக்கியன் ராஜபுத்திரன் இராச மாணிக்கம், மதுர விதானகே, சாகர காரியவசம், பேராசிரியர் சரித்த ஹேரத் ஆகியோர் இக்குழுவுக்கு நியமிக்கப்பட் டுள்ளனர்.

கடந்த கூட்டத்தொடரில் கோப் குழு வின் உறுப்பினராக இருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப் ராலுக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப் பினர் சாகர காரியவசம் இம்முறை நிய மிக்கப்பட்டுள்ளார்.

இதில் ஒன்பதாவது நாடாளுமன்றத் தின் முதலாவது கூட்டத் தொடரின் இறு திக் காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் அரச பொறுப்பு முயற்சிகள் குழுவால் தயாரிக்கப்பட்ட மூன்றாவது அறிக்கை இந்தக் கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பதற்கும் உறுப்பி னர்கள் அனுமதி வழங்கினர்.

கடந்த கூட்டத் தொடரில் கோப் குழு வுக்கு அழைக்கப்பட்ட நிறுவனங்கள் பல்வேறு காரணங்களால் பிற்போடப்பட்ட நிலையில், அந்த நிறுவனங்களை மீண் டும் அழைப்பதற்கும் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

எதிர்காலக் கூட்டத்துக்கு அழைக்கப் படும் நிறுவனங்கள் தொடர்பில் முன் னுரிமைப் பட்டியலைத் தயாரிப்பது குறித் தும் இங்கு முன்மொழியப்பட்டது.

நாடாளுமன்றத்தின் முன்னிடப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதி யளிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஏதே னும் எழுத்திலான சட்டத்தால் அரசுக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் அல்லது வேறு பொறுப்பு முயற்சியின் கணக்குகளைக் கணக்காய்வாளர் தலை மையதிபதியின் உதவியுடன் பரிசோ தனை செய்வது அரச பொறுப்பு முயற்சி கள் பற்றிய குழுவின் கடமையாகும்.

நேற்றைய கூட்டத்தில் அமைச்சர்க ளான ரோஹித அபேகுணவர்தன, கலா நிதி சரத் வீரசேகர, இராஜாங்க அமைச் சர்களான ஜயந்த சமரவீர, டி.வீ. சானக, இந்திக அனுருத்த ஹேரத், கலாநிதி நாலக கொடஹேவா நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த, பாட்டலி சம்பிக ரணவக்க, ஜகத் புஷ்ப குமார, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, பிரேம்நாத் சி. தொலவத்த, சாணக்கியன் ராஜபுத்திரன் இராச மாணிக்கம், மதுர விதானகே, சாகர காரி யவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.